பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 08 வியாழக்கிழமை | 21.05.2020 | கதிர் 197

## கொரோனா 1,028

கொழும்பு, மே 21

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1,028 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று ஒருவர் மட்டுமே புதிய தொற்றாளராக பக்கம் 02 »

## நாட்டுக்கு பேராபத்து!

### ஐ.தே.க. எச்சரிக்கை

கொழும்பு, மே 21

ஐ.நா மனித உரிமைகள் சபையிலிருந்தா அல்லது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்தா இலங்கையை ஜனாதிபதி நீக்கிக்கொள்ளப் போகிறார் பக்கம் 02 »

## கோட்டாவின் மிரட்டல் உரை இலங்கைக்குத்தான் ஆபத்து

### தமிழ்க் கூட்டமைப்பு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 21

அரசின் ஏற்பாட்டில் நடைபெற்ற தேசிய படைவீரர்கள் தின விழாவில் – போர் வெற்றி விழாவில் – ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சர்வதேச அமைப்புகளுக்கு மிரட்டல் விடும் வகையில் ஆற்றிய உரை இலங்கைக்குத்தான் ஆபத்தாக மாறும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

'நாட்டுக்காக பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்த படையினர் தேவையற்ற அழுத்தத்துக்கு உள்ளாக நான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. அதேவேளை, பக்கம் 02 »

## இனி இது ரகசியம் அல்ல!

தேர்தல் அறிவிக்கப்பட்ட கையோடு யாழ்ப்பாண சுகாதார சேவைகளில் அதிகாரிகள் இடமாற்றம் ஒன்று திடுதிப்பென அரங்கேறியது. அந்த மாற்றங்கள் பற்றிய செய்தியை இப்பத்தியில் விவரமாகக் குறிப்பிட்டிருந்தேன். பக்கம் 02 »

# நாடாளுமன்றத் தேர்தலை செப்ரெம்பர் நடத்த முடிவு?

### தேசப்பிரிய தலைமையிலான ஆணைக்குழு உறுப்பினர்களுடனான சந்திப்பில் தீர்மானம்

கொழும்பு, மே 21

பெரும் சர்ச்சைகளுக்குள்ளாகியுள்ளா நாடாளுமன்றத் தேர்தலை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது என அறியமுடிந்தது.

மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கிடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பக்கம் 02 »

## 94 வயதான கொரோனா நோயாளி குணமடைவு!

கொழும்பு, மே 21

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி குணமடைந்த மிகவும் வயதான நபராக, 94 வயதான பெண் ஒருவர் பதிவாகியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டு வெலிக்கடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர், பின்னர் அங்கிருந்து கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சுமார் ஒரு மாத காலமாகச் சிகிச்சை பெற்று வந்த இவர், தற்போது குணமடைந்து வீடு பக்கம் 02 »

## ஹூல் மீதான குற்றச்சாட்டுகள்: தேர்தல் ஆணைக்குழு அறிக்கை!

கொழும்பு, மே 21

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்னஜீவன் ஹூல் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து அறிக்கை ஒன்றை விரைவில் வெளியிட தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தேர்தல்கள் திணைக்களத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்னஜீவன் ஹூல் அரசியல் பிரமுகர்களின் கருத்துக்களுக்கு இணங்கச் செயற்படுகின்றார் எனவும், அவரது புதல்வி வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளபோதிலும் எந்தவித தனிமைப்படுத்தல் செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை எனவும், மேலும் சில காரணங்களை முன்வைத்தும் வெளியிலிருந்து அவர் மீது பல குற்றச் பக்கம் 02 »

## சபையைக்கூட்ட கோட்டாவுக்கு விருப்பம் இல்லை நீதிமன்றம்தான் நெருக்கடியைத் தீர்க்க வேண்டும்

### முன்னாள் பிரதமர் ரணில் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 21

பொதுத்தேர்தலுக்கான திகதி குறித்து தற்போதைக்குத் தீர்மானிக்க முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத் தீர்ப்பு கிடைக்கவும் நாள்கள் செல்லும். ஆனால், ஜூன் மாதம் 2ஆம் திகதியுடன் தேர்தலுக்கான ஜனாதிபதியின் வர்த்தமானி காலாவதியாகின்றது. எனவே, கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரும்பாமையினால் நீதிமன்றமே உரிய தீர்மானத்தை அறிவிக்க வேண்டும்.

– இவ்வாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

பொருளாதாரம் குறித்து திட்டமொன்றை வகுக்குமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கினேன். அவ்வாறு இல்லாது நாட்டை அபிவிருத்திப் பாதையை நோக்கிக் கொண்டுச் செல்ல முடியாது.

தற்போது பக்கம் 02 »

## 30 படகுகளில் சென்ற திருமலை மீனவர் 150 பேரை இந்தோனேஷியாவுக்கு அடித்துப் போனது சூறாவளி!

திருகோணமலை – குடாவெல பகுதியியைச் சேர்ந்த 150 மீனவர்களுடன் 30 படகுகள் இந்தோனேசியாவுக்கு அடித்துச் செல்லப்பட்டுள்ளன எனக் கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அம்பன் சூறாவளியின் தாக்கம் காரணமாக பலத்த அலைகளால் இந்தப் படகுகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மீனவர்கள் பாதுகாப்பாக உள்ளனர் எனவும் அவர்களுடன் தொடர்புகொள்ள முடிந்துள்ளதாகவும் கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் வானிலை காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை இலங்கையில் அம்பன் சூறாவளி புயலின் தாக்கம் இன்று முதல் குறைந்து செல்லும் நிலை காணப்படுவதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடற்படைச் சிப்பாய்களில் 585 பேருக்குக் கொரோனா

கொழும்பு, மே 21

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் இதுவரை அடையாளம் காணப்பட்டவர்களில் 585 பேர் கடற்படையினர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அவர்களில் 221 பேர் இதுவரை குணமடைந்துள்ளனர் எனவும், 364 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் கடற்படையின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிகிச்சை பெறும் கடற்படையினரில் 156 பேர் வெலிசறையிலுள்ள கடற்படை பொது மருத்துவமனையிலும், 208 பேர் ஏனைய மருத்துவமனைகளிலும் உள்ளனர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இடமாற்றங்களில் உள்ள பின்னடைவுகளைச் சுட்டிக்காட்டித்தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் திடுதிப்பென மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்கள் என்பதால் இவற்றைத் தேர்தல் ஆணையம் ரத்துச் செய்ய அதிக வாய்ப்புண்டு என்றும் கோடிகாட்டியிருந்தேன்.

அப்படியே இப்போது ஆகியிருக்கின்றது.

யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராக இதுவரை கடமையாற்றி வந்தவர் டாக்டர் ஏ.தேவநேசன். மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக ஒருவர் நியமிக்கப்படாமையால் பிரதிப் பணிப்பாளர் பதவியுடன் மேலதிகமாக பிராந்தியப் பணிப்பாளர் பதவியையும் அவரே கவனித்து வந்தார்.

இந்த நிலையில்தான் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் ஏப்ரல் 2ஆம் வாரத்தில் திடீரென இடமாற்றங்களை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன் அறிவித்தார்.

★ அதன்படி - மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகிய கேதீஸ்வரனே, யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியையும் கவனிப்பார்.

★ யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதாரப் பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த டாக்டர் ஏ.தேவநேசன் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகராக இடம் மாற்றப்பட்டார்.

★ அதுவரை ஊர்காவற்றுறை மருத்துவ அத்தியட்சகருக்குப் பதில் கடமையில் இருந்த டாக்டர் எஸ்.திலீபன் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் திட்டமிடல் பகுதிக்கான மருத்துவ அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

★ அதுவரை அந்தத் திட்டமிடல் பகுதிக்கான மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிய மருத்துவர் சி.குமாரவேள் யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

- இந்த மாற்றங்கள் வந்தபோதே இவை தேர்தல் சமயத்தில் நடைபெறுகின்றமையால் ஒழுங்குமீறல் நடவடிக்கை என தேர்தல் ஆணையத்தினால் கணிக்கப்படலாம் என்று கூறியிருந்தேன்.

அப்படியேதான் நடந்திருக்கின்றது.

இந்த இடமாற்றங்களை ரத்துச் செய்துள்ள தேர்தல் ஆணையம், ரத்து நடைமுறைப்படுத்தப்பட்டமையை உடனடியாக உறுதிப்படுத்தும்படி வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கடிதம் மூலம் கேட்டிருக்கின்றது.

★ ★ ★

கடந்த 13ஆம் திகதி காலையில் நல்லூர் சுற்றாடலில் சுமந்திரனின் படத்துடன் உருவ பொம்மை ஒன்று கட்டப்பட்டு அதற்கு செருப்பு மாலை போடப்பட்டிருந்தது வாசர்களுக்குத் தெரிந்ததுதான்.

இது குறித்து பொலிஸ் முறைப்பாடு ஏதும் செய்யப்பட்டதா, பொலிஸார் விசாரணை நடத்தினரா என்பது. எனக்குத் தெரியவில்லை.

ஆனால் சுமந்திரனின் ஆதரவாளர்கள் சிலர் 'புலனாய்வுப் பத்திரிகையியல்' மாதிரி இந்த விடயத்தின் சூத்திரதாரிகளைத் தேடிப் புறப்பட்டார்கள். அந்தச் சுற்றாடலில் இருந்த பல்வேறு சி.சி.ரி.வி. கமராக்களை எல்லாம் நோண்டி, இந்தக் கைங்கரியத்தைச் செய்தவர்களை அவர்கள் அடையாளம் கண்டுள்ளனர். அந்த அரசியல் தரப்புகளை அம்பலப்படுத்துவதோ, பகிரங்கப்படுத்துவதோ என் வேலையல்ல.

'ஹையஸ்' வான் ஒன்றில் அயலில் சில நூறு மீற்றர் தொலைவில் இருந்து வாகனத்தில் புறப்பட்டு 13ஆம் திகதி அதிகாலை 4.14 மணிக்கு அந்த இடத்தில் வந்து அந்த உருவபொம்மையை நிறுத்தியது, பின்னர் நல்லூர் பாரதி சிலை வரை வந்து ஒரு சுற்றுச் சுற்றிக் கொண்டு, தாம் வைத்த உருவ பொம்மையையும் தூர நின்று படம் பிடித்துக் கொண்டு திரும்பிச் சென்றமை வரை எல்லாம் கனகச்சிதமாக வழிவழியில் இருந்த கமராக்களில் பதிவாகியுள்ளனவாம்.

நல்லூர் கோவில் வீதியில் நீதியரசர் விக்னேஸ்வரன் வீட்டு வாசலில் உள்ள சி.வி.ரி.வி. கமராக்களின் பதிவுதான் இன்னும் பாக்கி. அவற்றில் இருந்தும் அந்த வேளை - விடிகாலை 4.10 இலிருந்து 4.25 வரையான - காட்சிகளின் பதிவை எடுத்துக் கொண்டால், சுமந்திரன் உருவப்பொம்மையை நாட்டியவர்களின் நடவடிக்கையை புறப்பட்ட இடத்திலிருந்து முடிவு இடம்வரையான காட்சி- யாக முழுமையாக ஒழுங்குபடுத்தி விடலாமாம்.

நீதியரசர் விக்னேஸ்வரனிடம் போய் யார் கேட்பது, அதுவும், சுமந்திரனின் உருவப் பொம்மை விவகாரத்தின் சூத்திரதாரிகளைக் கண்டு பிடிப்பதற்கு உதவுங்கள் என்று யார் அவரை வேண்டுவது என்று தெரியாமல் சுமந்திரன் ஆதரவுப் பையன்கள் தடுமாறுகின்றார்கள். பூனைக்கு மணி கட்டுவது யார் என்று குழப்பம் அவர்களுக்கு.

*"நீதியரசர் விக்னேஸ்வரனிடம் போய் விடயத்தைச் சொல்லுங்கள். அவர் நிச்சயம் உதவுவார்."* - என்றேன் என்னிடம் வந்து அந்த சி.சி.ரி.வி. கமராப் பதிவுகளைப் போட்டுக் காட்டிய அந்த இளைஞர்களிடம்.

*"இந்த விடயங்கள் சுமந்திரனுக்குத் தெரியுமா?"* - என்று அந்த இளைஞர்களிடம் கேட்டேன்.

*"ஆம், தெரியும்."* - என்றார்கள்.

*"மேற்கொண்டு என்ன செய்யப் போகின்றார்? பொலிஸுக்குப் போய் நடவடிக்கை எடுக்கக் கோருவார்களா? அல்லது ஊடக மாநாடு நடத்தி உண்மை முகங்களைப் பகிரங்கப்படுத்தி அம்பலப்படுத்துவார்களா?"* - என்று கேட்டேன்.

*"எங்களுக்கு அவர் என்ன செய்வார் என்று தெரியாது. ஆனால் இந்தப் படக் காட்சிகளின் பதிவுகள் அவர் கைக்குக் கிடைத்துவிட்டன."* - என்றார்கள் அவர்.

தங்கள் தமிழரசுக் கட்சிக்குள்ளே இருந்தோ அல்லது கூட்டமைப்புக்குள்ளிருந்தோ இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது சுமந்திரனுக்கு ஆறுதல் தரும் விடயம்.

உருவப் பொம்மையை வைத்து அங்கு நிலை நிறுத்திய ஒருவர் வாகனத்தில் இருந்து விந்தி, விந்தி நடந்து வந்து வேலையை முடித்து விட்டு, அதே பாணி நடையில் வாகனத்தில் ஏறுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

அவர் அருகில் கைலாயபிள்ளையார் கோவிலடியில் இருக்கும் ஒரு தேநீர் கடைக்கு அடிக்கடி வந்து செல்பவர் எனவும் அடையாளம் காணப்பட்டிருக்கின்றார்.

*"எந்த ஒரு விசயத்தையும் பிளான் பண்ணாமல் பண்ணினா இப்படித்தான். பிளான் பண்ணிப் பண்ணணும்... ஓகே..!"* - என்று வடிவேலுவின் நகைச்சுவை வசனம் ஒன்று உண்டு.

பிளான் பண்ணாமல் பண்ணிய தாலை ஹயஸ் வான் இலக்கத் தகட்டில் இருந்து சுமந்திரனின் உருவப்பொம்மை வைத்தமை வரை எல்லாம் சி.சி.ரி.வி கமராவில் பதிவாகிவிட்டது. - சினிமாப் படம் எடுத்த மாதிர்.

தேர்தல் சூடு பிடிக்கும் போது சமூக இணையங்களில் அக்காட்சி வலம் வரும் என எதிர்பார்க்கலாம்.

-மின்னல்-

## ஹூல் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில், அவற்றுக்குப் பதில் வழங்கும் விதத்தில் தேர்தல்கள் ஆணைக் குழுவே விரைவில் அறிக்கை ஒன்றை வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 94 வயதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பியுள்ளார்.

பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்த இந்தப் பெண், மருத்துவமனையில் இருந்து வெளியேறியபோது, வைத்திய சாலையின் சுகாதாரப் பணியாளர்கள் அவரை மிக மகிழ்ச்சியுடன் பூச்செண்டு வழங்கி வழியனுப்பி வைத்துள்ளனர்.

## கோட்டாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது நாட்டுக்கு அநீதியான வகையில் ஏதேனும் ஒரு சர்வதேச நிறுவனம் அல்லது சர்வதேச அமைப்பு தொடர்ந்தும் செயற்படுமாக இருந்தால் அந்த நிறுவனத்தின் அல்லது அமைப்பின் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்கிக்கொள்ள நான் ஒருபோதும் பின்நிற்கப் போவதில்லை' என்று ஜனாதிபதி கோட்டாபய உரையாற்றியிருந்தார்.

இது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா கருத்துத் தெரிவிக்கையில்,

சர்வதேச அமைப்புக்களிலிருந்து நிறுவனங்களிலிருந்து வெளியேறுவோம் என்று ஜனாதிபதி விடுத்துள்ள எச்சரிக்கை இலங்கைக்குத்தான் ஆபத்தானது. கொரோனா நிலைமையில் இலங்கைக்குக் கிடைக்கும் உதவிகளையும் அது பாதிக்கும். பொருளாதார ரீதியில் நாடு ஏற்கனவே பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது. இப்படியான சூழலில் இலங்கை சர்வதேச அமைப்புக்களிலிருந்து வெளியேறுவது இலங்கைக்குத்தான் ஆபத்தானது - என்றார்.

புளொட் அமைப்பின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் கருத்துத் தெரிவிக்கையில்,

நாடு கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியாக பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளோம். இவ்வாறான சூழலில் வெளிநாடுகளையோ அல்லது சர்வதேச அமைப்புக்களையோ பகைப்பது நல்லதல்ல. அவர்களை எந்த விடயத்துக்காக பகைத்தாலும் விளைவு நாட்டுக்குத்தான். தமிழ் மக்கள் விடயத்தில் சர்வதேச சமூகம் நியாயமான தீர்வு கிடைக்கவேண்டும் என்பதற்காகப் பாடுபடுகின்றது. அவர்கள் அந்த அக்கறையைத் தொடர்ந்தும் வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான் எமது விருப்பம் - என்றார்.

## நாட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதை நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு ஜனாதிபதியின் அணுகுமுறைகள் நாட்டை பேராபத்திற்குக் கொண்டு செல்லும் எனவும் ஐ.தே.க. உறுப்பினர் வஜிர அபேவர்தன எச்சரித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

சர்வதேச நாணய நிதியம், உலக சுகாதார அமைப்பு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவை, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட எந்த அமைப்பிடனான உறுப்புரிமையை ஜனாதிபதி நீக்கிக்கொள்ளப் போகிறார் என்பதை நாட்டு மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறுப்புரிமையை இலங்கை நீக்கிக்கொண்டால் ஐரோப்பிய நாடுகளுக்கான இலங்கையின் ஆடை உற்பத்திய மற்றும் மீன் ஏற்றுமதி என்பன முற்றாக நிறுத்தப்படும். இது நாட்டின் பொருளாதாரத்திற்குப் பேரடியாகவே அமையும்.

ஆகவே ஜனாதிபதி இதில் எந்த அமைப்பிலிருந்து இலங்கையின் உறுப்புரிமையை நீக்கிக்கொள்வார் என்பதை அறிவிப்பது சிறந்தது. அப்போதுதான் நாட்டு மக்களுக்கு தற்போதைய ஜனாதிபதி குறித்துத் தெளிவு ஏற்படும் - என்றார்.

## கொரோனா 1,028...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)'

அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் 35 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் கடற்படையினர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, தொற்றுக்குள்ளாகியவர்களில் மேலும் 15 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய தொற்றிலிருந்து பூரண குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 569 இலிருந்து 584 ஆக உயர்ந்துள்ளது.

இதுவரை தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட 1,028 பேரில் 9 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 435 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனிடையே மேலும் 112 பேர் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

## நாடாளுமன்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத் தேர்தல் திகதியில் மாற்றம் ஏற்படும் என ஏற்கனவே தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது. இந்த நிலையில், எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தலை நடத்த எந்தவித சாத்தியமும் இல்லை என்று உயர்நீதிமன்றத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று தெரிவித்துள்ளது.

இதன்பிரகாரம் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த மேலும் 70 நாட்கள் தமக்குத் தேவைப்படுவதால் செப்ரெம்பர் மாதம் வரையில் தேர்தலை ஒத்திவைப்பதே சிறந்தது என்று தேர்தல்கள் ஆணைக் குழு உறுப்பினர்கள் முடிவெடுத்துள்ளனர்.

எனினும், நாடாளுமன்றக் கலைப்பு, பொதுத்தேர்தல் திகதி ஆகிய வர்த்தமானிகளை சவாலுக்குட்படுத்தும் மனுக்கள் மீதான விசாரணையின் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் இது குறித்து வெளிப்படையான இறுதி முடிவு ஒன்றை எடுப்பது எனவும் நேற்றைய சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சபையைக்கூட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு எதிர்கொண்டுள்ள பலதுறைசார் வீழ்ச்சிகளால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி புள்ளியிலேயே உள்ளது. வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் நாடு திரும்புகின்றனர்.

அவர்கள் மூலம் கிடைக்கப் பெற்ற அந்நிய செலவணி இனி கிடைக்கப்போவதில்லை. மறுபுறம் அவர்களுக்கு உள்நாட்டில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். உள்நாட்டிலும் பல நிறுவனங்கள் தொழிலாளர்களைக் குறைத்து வருகின்றன.

ஆகவே, பாரியதொரு சவால் நாட்டின் முன்னுள்ளது. உரிய திட்டமொன்றை வகுக்காது முன்னோக்கிச் செல்ல முடியாது என்பதை அரசுக்குத் தெளிவுபடுத்தியுள்ளேன்.

தேர்தலுக்காகத் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னரே கட்சி என்ற வகையில் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். பாரிய கூட்டங்களை நடத்த இயலாது. ஆனால், மக்களுக்குத் தகவல்களைக் கொண்டு செல்ல புதிய முறைகளைக் கையாள வேண்டும்.

கொரோனா வைரஸ் பிரச்சினை முடிந்துவிட்டதாக அரசு காண்பிக்க முற்பட்டாலும் சுகாதாரத்துறை உறுதியாகக் கூறவில்லை.

எனவே, தேர்தல் எப்போது என்பதை தற்போது கூற இயலாது. உயர்நீதிமன்ற வழக்குகள் முடியும் வரை காத்திருக்க வேண்டும். வழக்கு முடிவடைந்த பின்னர் 35 நாள்கள் தருவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டது.

இராணுவ வெற்றி நிகழ்வு ஒத்திகையில் கலந்துகொண்ட இரு இராணுவ வீரர்களுக்கும் கொரோனா வைரஸ் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே, தேர்தல் குறித்த உறுதியான திகதியைக் குறிப்பிட இயலாது.

உயர்நீதிமன்றத் தீர்ப்பு கிடைக்க நாள்கள் செல்லும். ஆனால், ஜூன் மாதம் 2 ஆம் திகதியுடன் நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஜனாதிபதியின் வர்த்தமானி காலாவதியாகின்றது. எனவே, இருந்த நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கு ஜனாதிபதி விரும்பாமையினால் நீதிமன்றமே உரிய தீர்மானத்தை அறிவிக்க வேண்டும் - என்றார்.

# கொரோனாவைக் கட்டுப்படுத்த எடுக்கும் நடவழிக்கை தொற்றை வளரவிடுவதற்கே வழிகாட்டுவதாகிவிடலாம்

## அகில இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் எச்சரிக்கை

கொழும்பு, மே 21

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதில் ஸ்ரீலங்கா அரசாங்கம் எடுத்து வரும் ஒருசில நடவடிக்கைகள் தொற்றை மேலும் வளரவிடுவதற்கே வழிகாட்டலாக அமைந்து விடும் என்று அகில இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான சமன் ரத்னப்பிரிய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உயிரைப் பணயம் வைத்து தாதியர்களும் மருத்துவர்களும் சேவை செய்து வரும் நிலையில் அவர்களுக்கான முறையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் தவறி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துவெளியிட்ட போதே அகில இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சமன் ரத்னப்பிரிய இந்தக் கருத்துக்களை



வெளியிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

பஸ்ஸில் பயணித்தவர்கள் அதிகம் என்பதால் கேகாலையிலிருந்து கண்டிக்குச் சென்ற பஸ் பேராதனை பொலிஸாரால் இடைமறிக்கப்பட்டது. அனைவரையும் கீழே இறக்கியுள்ளனர். அவர்களிடம் விசாரணை செய்து கண்டி வைத்தியசாலைத் தாதியர்கள் உட்பட பணியாளர்களை அனுப்பிவைத்துள்ளனர்.

சிறிமாவோ சிறுவர் வைத்தியசாலை, பேராதனை வைத்தியசாலையைச் சேர்ந்த பல்வேறு அதிகாரிகள், தாதியர்கள் பேராதனை பொலிஸ் நிலையத்திற்கு அருகிலிருந்து வைத்தியசாலை வரை நடைபயணமாக சென்றுள்ளனர். பொலிஸார் தத்தமது கடமைகளை செய்து வருவது நியாயம்தான்.

ஆனாலும் இன்று கொரொனா வைரஸைக் கட்டுப்படுத்த உயிரைப் பணயம் வைத்து போராடி வருகின்ற மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு பணிசெய்ய வெறுப்புநிலை ஏற்பட்டுள்ளது.

இன்று அவர்களுக்கு போக்குவரத்துப் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. மாதத்திற்கு அல்லது தினமும் முச்சக்கர வண்டி உட்பட வாடகை வாகனங்களில் அவர்கள் பணம் விரயம் செய்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது. முறையான போக்குவரத்து வசதிகள் மற்றும் வாகனங்கள் இல்லாததினால் பல மணிநேரம் பஸ் தரிப்பிடத்திலேயே நிற்கின்ற சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன.

நிலுவைக் கொடுப்பனவுகள் கூட இன்னும் வழங்கிவைக்கப்படவில்லை. இதுகுறித்து சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் பேச்சு நடத்திய போதிலும் அவரால் வழங்கப்படுகின்ற உத்தரவுகள் மற்றும் பணிப்புரைகளை அதிகாரிகள் முறையாக அமுல்படுத்துவதில்லை.

இப்படியிருக்கையில் ஸ்ரீலங்காவில் கொரோனா வைரஸ் முழுமையாகக் கட்டுப்படுத்திவிட முடியுமா? இது மிகப்பெரிய சவாலாக எதிர்வரும் நாள்களில் மாறிவிடும் அபாயமும் காணப்படுகின்றது. – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மன்னாரர் சிவகரனிடம் விசாரணை



2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மன்னார் மாவட்டத்தில் உள்ள ஆள்காட்டி வெளி மற்றும் பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லங்களில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உயிரிழந்த உறுப்பினர்களுக்கு மாவீரர் தினம் அனுஷ்டிக்க ஏற்பாடு மேற்கொண்டமை தொடர்பாக கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தினுடைய தலைவர் சிவகரனிடம் நேற்றைய தினம் கொழும்பு பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் இரண்டு மணி நேர விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்த விசாரணையின் போது தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் நிகழ்வை தொடர்சியாக அரசாங்கத்துக்கு எதிராக நடத்திவருகின்றமை தொடர்பாக சிவகரனிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளமையுடன், இந்த விடயம் தண்டனைக் குரிய குற்றம் எனவும், இனி வரும் நாள்களில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால் உடனடியாக கைது செய்யப்படுவார் எனவும் அவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் எச்சரிக்கப்பட்டுள்ளார் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திடீர் விசாரணை தமிழ் உரிமை செயற்பாட்டாளர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## கடைசி நோயாளி குணமடைந்து 2 வாரங்களின் பின்னரே தேர்தல்

### வலியுறுத்துகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொரோனா வைரஸ் தொற்றிய இறுதி நோயாளியும் குணமடைந்து இரண்டு வாரங்களின் பின்னரே தேர்தலை நடத்த வேண்டும் என்பது நாட்டு மக்களின் நிலைப்பாடு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வேட்பாளருமான அஜித் மன்னப்பெரும இதை ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று பரவும் தற்போதைய சந்தர்ப்பத்தில் தேர்தல் ஒன்றை நடத்துவதை நாட்டு மக்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

நான் நாட்டின் பொது நிலைப்பாட்டுக்காகக் குரல் கொடுக்கின்றேன்.

இறுதி கொரோனா நோயாளி குணமடைந்து, கொரோனா நோயாளிகள் எவரும் இல்லை என்ற நிலைமையின் கீழ் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் அஜித் மன்னப்பெரும குறிப்பிட்டுள்ளார்.

## பொதுமக்கள் இல்லாமலேயே வற்றாப்பளைஅம்மன் பொங்கல்

### ஜூன் 8 ஆம் திகதி நடக்கும் நேற்றைய கூட்டத்தில் முடிவு



வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் தொடர்பில் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் இராணுவத்தினர் பொலிஸார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தினர் முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலய நிர்வாகத்தினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது சமய ரீதியான கலாச்சார பாரம்பரிய நிகழ்வுகள் மாத்திரம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் பக்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்றும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வரலாற்று சிறப்பு மிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின், வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் ஜூன் மாதம் 08ஆம் திகதியன்று இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

புழுக்கொடியல் விற்பனைக்கு.

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு.
தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

வீடு வாடகைக்கு தேவை

வியாபார நிறுவனம் ஒன்றிற்கு யாழ் நகரை அண்டிய பகுதியில் வாடகைக்கு வீடு தேவை.
தொடர்புகளுக்கு:-
071 7777 559

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

# தேர்தல் ஆணையத்தின் முடிவு கலைப்பை சட்ட வலிதற்றதாக்கும்

நாடாமன்றக் கலைப்பு, ஜுன் 20ஆம் திகதி தேர்தலை நடத்தும் அறிவிப்பு ஆகியவற்றுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணையை உயர்நீதிமன்றம் தொடர்ந்து மூன்றாவது நாளாக நேற்று முன்னெடுத்தது.

பெரும்பாலும் இவ்வாரம் முழுவதும் – நாளை வெள்ளிக் கிழமை வரை – இந்தப் பூர்வாங்க விசாரணை நடைபெறும் எனத் தெரிகின்றது.

அதன் பின்னர், இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்று எதிர்மனுதாரர்களுக்கு – பிரதிவாதிகளுக்கு – நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்புவதா அல்லது மனுக்களைத் தொடர்ந்து விசாரணைக்கு ஏற்காமல் தள்ளுபடி செய்வதா என்பதை நாளைய விசாரணையின் முடிவில் நீதிமன்றம் அறிவிக்கக் கூடும்.

அல்லது அதுபற்றிய முடிவை அடுத்த வாரத்தில் ஒரு தினத்தில் நீதிமன்றம் வழங்கும் எனத் தெரிவித்து நாளையுடன் இந்தப் பூர்வாங்க விசாரணையை முடிவுறுத்தக் கூடும்.

எது, எப்படி என்றாலும் இந்த வழக்குத் தொடரபட்டமையால் ஒரு விவகாரம் – மக்களின் மனதை உலுப்பிக் கொண்டிருந்த ஒரு விடயம் – சம்பந்தமாக திட்டவட்டமான ஒரு முடிவு வெளியே வந்திருக்கின்றது.

கொரோனா நெருக்கடி ஏற்பட்டுள்ள சூழலில், இனித் தேர்தல் எப்போது என்ற சிக்கலான வினா தொடர்பில் தேர்தல் ஆணையத்தின் நிலைபாடு யாது என்பது உயர்நீதிமன்றத்தில் பதிவாகியுள்ளது.

இந்த வழக்குகளில் தேர்தல் ஆணையத்தின் மூன்று ஆணையாளர்களுமே பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.

இதில் தேர்தல் ஆணையத்துக்காகவும், பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் தவிர்ந்த மற்றைய இரு ஆணையாளர்களுக்காகவும் சட்டத்தரணி சாலிய பீரிஸ் முன்னிலையானார். பேராசிரியர் கூல் சார்பில் சட்டத்தரணி அஸ்திக தேவேந்திரா ஆஜரானார்.

இதில் தேர்தல் ஆணையத்தின் சார்பிலும், இரு ஆணையாளர்கள் சார்பிலும் முன்னிலையான சட்டத்தரணி சாலிய பீரிஸ், தேர்தல் நடத்துவது தொடர்பில் ஆணையத்தின் நிலைப்பாட்டை நீதிமன்றத்தில் பதிவு செய்தார்.

கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலை நடத்தக் கூடிய அளவுக்கு நிலைமை மேம்பாடடைந்தது என்று பச்சைக் கொடி காட்டும் சான்றிதழை சுகாதார, மருத்துவ அதிகாரிகள் வழங்கிய பின்னர் தேர்தலை நடத்துவதற்கு 10 முதல் 11 வாரங்களாவது தேவைப்படும் என்பதுதான் தேர்தல் ஆணையத்தின் நிலைப்பாடு என்று அவர் குறிப்பிட்டார்.

அதாவது –

தேர்தலை நடத்தலாம் என்று சுகாதார, மருத்துவ அதிகாரிகள் அனுமதி தந்தால் – அது இன்னும் தரப்படவில்லை, எப்போது தரப்படும் என்பதும் தெரியாது, அப்படித் தந்தால் – அதற்குப் பின்னரும் குறைந்தது இரண்டரை மாதங்களாவது செல்லும் தேர்தலை நடத்துவதற்கு என்பது உயர்நீதிமன்றத்துக்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இப்போதே நாடாளுமன்றத்தைக் கலைத்து 78 நாள்கள் கடந்து விட்டன.

இனிமேல், தேர்தலை நடத்தவதற்கான உகந்த சூழல் ஏற்பட்டுவிட்டது, கொரோனா அச்சுறுத்தல் இல்லை என்று எப்போது சுகாதார, மருத்துவ அதிகாரிகள் சான்றளிப்பார்கள் என்பது தெரியாது. அப்படி அவர்கள் அறிவித்தாலும் அதற்குப் பின்னரும் குறைந்தது இரண்டரை மாதங்கள் தேவை தேர்தலை நடத்துவதற்கு.

அப்படி எனில் –

இன்றைய நிலைவரத்தின்படி, நடாளுமன்றம் கலைக்கப்பட்டு ஐந்து மாதங்கள் கடந்த பின்னரும் புதிய நாடாளுமன்றம் கூட வாய்ப்பில்லை என்பது தெட்டத்தெளிவாகின்றது. இதனை, பெரும்பாலும் நாளை இந்த வழக்குகள் தொடர்பான பூர்வாங்க விசாரணையின் மீது ஏழு மனுதாரர்கள் சார்பில் இறுதித் தொகுப்புரை வழங்கும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றுக்குச் சுட்டிக்காட்டுவார் என எதிர்பார்க்கலாம்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களில் தேர்தலை ஒத்திவைக்கக் கோரும் விவகாரம் தொடர்பில் மனுதாரர்களின் கோரிக்கைக்கு இசைவான – சார்பான – பதிலையே தேர்தல் ஆணையம் நீதிமன்றத்தில் பதிவு செய்திருப்பதால் அந்தக் கோரிக்கையை மட்டும் முன்வைத்துத் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மனுவைத் தாம் தொடர்ந்து முன்னெடுக்கவில்லை என அந்த மனு சார்பில் முன்னிலையான சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால் அவ்விடயத்தை ஒட்டி, தேர்தல் ஆணையம் எடுத்திருக்கும் முடிவு – அதாவது தேர்தலை நடத்துவதற்கு சுகாதார அதிகாரிளால் பச்சைக் கொடி காட்டப்பட்ட பின்னரும் தேர்தலை நடத்துவதற்கு குறைந்தபட்சம் இரண்டரை மாதங்களாவது அவசியம் என்ற தேர்தல் ஆணையத்தின் நிலைப்பாடு – நாடாளுமன்றத்தை கலைத்த ஜனாதிபதியின் உத்தரவுக்கு எதிரான கோரிக்கைக்கு நல்ல வலுச் சேர்த்திருக்கின்றது.

அதைத் தமது நாளைய தொகுப்புரையில் சுமந்திரன் வசமாகப் பயன்படுத்துவார் என எதிர்பார்க்கலாம்.

# உயர்பதவிகளுக்கு படை அதிகாரிகளை அரசு நியமிப்பது நல்ல சமிக்ஞையல்ல

## பிரபா கணேசன் சுட்டிக்காட்டு



கொழும்பு, மே 21

நாட்டில் அரச உயர் பதவிகளுக்கு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளை நியமிப்பது சற்றுச் சறுக்கலான விடயமாகவே இருக்கிறது. இந்த சமிஞ்சை சரியானதாக எமக்குப் படவில்லை என்று ஜனநாயக மக்கள் காங்கிரசின் தலைவர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந் துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து அவர் -

இம்முறை சுவர்கடிகாரம் சின்னத்தில் 9 தமிழர்கள் வன்னித் தொகுதியில் தனித்து போட்டியிடுகின்றோம். 85 வீதம் தமிழர்கள் வாழும் இந்த மாவட்டத்தில் அதன் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படவேண்டும் என்று எண்ணுகின்றேன். தேர்தல் வெற்றிக்கு பின்னர் நாம் அரசுடன் இணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் இருக்கின்றன. அதன் மூலம் இழந்த உரிமைகளையும், அபிவிருத்திகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

இங்குள்ள மாற்று சமூகங்களுக்கு தமிழ் மக்களைவிட அதிகமான சலுகைகள் கொடுக்கப்பட்டன. இவை முறியடிக்கப்பட்டு எமது வன்னி மண் பாதுகாக்கப்பட வேண்டும். வன்னியில் எமது மக்களுக்கு அரச வேலை வாய்புக்கள் சரியான முறையில் கிடைப்பதில்லை. நாட்டில் 25 இலட்சத்திற்கும் அதிகமாக அரச வேலைவாய்ப்புக்கள் இருக்கின்றன. மாவட்ட ரீதியாக பார்த்தால் வன்னியில் 60 தொடக்கம் 70 ஆயிரம் பேருக்கு அரச வேலைகள் கிடைக்கப்பெற வேண்டும். ஆனால் 10 ஆயிரத்திற்கும் குறைவாகவே அரச வேலைவாய்ப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த நிலை மாற வேண்டும். வன்னியில் இருக்கும் 90 ஆயிரம் தமிழ் குடும்பங்களுக்கு அரச வேலைவாய்ப்பினை பெற்றுக்கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்கும்போது கொரோனோ போன்ற இடர் காலங்களில் மக்கள் தமது வாழ்க்கையை கொண்டு செல்ல முடியும்.

நாட்டில் அரசஉயர் பதவிகளுக்கு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளை நியமிப்பது சற்று சறுக்கலாகவே இருக்கிறது. இந்த சமிக்ஞை சரியானதாக எமக்கு படவில்லை. இவ்விடயம் தொடர்பாக அரசுடன் பேசி இராணுவமயமாக்கல் விடயங்களை தடுத்து நிறுத்துவதற்கு முழுமையாக முயற்சி செய்வோம்.

சிங்கள பௌத்த அரசு முள்ளிவாய்க்கால் போன்ற நிகழ்வுகளை நடத்துவதற்கு எப்போதும் விரும்புவதில்லை. நல்லாட்சி அரசிலும் கூட இப்படியான நிலை ஏற்பட்டிருந்தது. இம்முறையும் கொரோனாவை முன்னிறுத்தி அரசு தடைகளை ஏற்படுத்தியிருந்தது. அரசியல்வாதிகளுக்கு கூட தடைகள் ஏற்படுத்தப்பட்டன. எனினும் அதில் கலந்துகொள்ள வேண்டும் என்று உறுதியாக இருந்தமையால் நான் முல்லைத்தீவில் கலந்துகொண்டு அஞ்சலியைச் செலுத்தினேன். சில அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் கூட தங்களது உரிமைகளைகூட நிலைநாட்டாமல் கைவிட்டு விட்டு திரும்பிச் சென்றனர். இவர்கள் எப்படி மக்களின் உரிமைகளை பெற்றுக் கொடுப்பார்கள் என்பது தெரியவில்லை.

தற்போதைய நிலையில் தேர்தலை நடத்துவதா இல்லையா என்ற நிலைப்பாட்டை சுகாதார துறை அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும். இங்கு மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டே நாம் செயற்பட வேண்டும். எனினும் யூன் 20 இல் தேர்தல் நடத்தப்படாது என்பது எனக்கு தெரிகின்றது. அதற்கான சாத்தியகூறுகள் இல்லை என்று நினைக்கின்றேன் - என்றார்.

# சாமிமலையில் 102 பேர் நிர்க்கதி



கொழும்பு, மே. 21

வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மஸ்கெலியா ,சாமிமலை ஓல்ட்டன் கீழ்ப்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 30 குடும்பங்களைச் சேர்ந்த 102 பேர் உடைமைக்களை இழந்து நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ளனர்.

மலையகத்தில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்த கடும் மழையினால் வெள்ளம் பெருக்கெடுத்ததுடன் வீதி போக்குவரத்துகள் மண் சரிவினால் பாதிப்படைந்ததுடன் குடியிப்புகளுக்குள் வெள்ள நீர் புகுந்தமையினால் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.

அந்த வகையில் மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குற்பட்ட சாமிமலை ஓல்டன் கீழ் பிரிவு தோட்ட பகுதியில் நேற்று முன் தினம் பெய்த அடை மழையில் சாமிமலை கல்தோனி ஓயா பெருக்கெடுத்தமையினால் ஆற்றடி பிள்ளையார் ஆலயம் உட்பட சூழவுள்ள 30 குடியிருப்புகளுக்குள் வெள்ளநீர் புகுந்தது. இதனால் 102 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளப்பெருக்கெடுப்பினால் தமது உடைமைகளை, அடையாள அட்டை, பிறப்புசான்றிதழ் ,அத்தியாவசிய பொருட்கள், தளபாடங்கள் கால்நடைகள் ஆகியன நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் மாற்று உடைகள் கூட இல்லாது தவிப்பதாகவும் பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர்.

மேலும் பாடசாலை மாணவர்களின் சீருடைகள், பாதணிகள் என்பன வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதோடு நேற்று பாதிக்கப்பட்ட மக்கள் தத்தமது குடியிருப்புகளுக்குள் தேங்கி நிற்கும் கழிவுகளையும் சேறுகளையும் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதியில் கிருமிநாசினி தெளிக்க தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வரும் அதே வேளையில், அப்பகுதியில் இடம் பெற்ற மண்சரிவில் சிக்குண்ட சிறுவன் ஒருவன் மஸ்கெலியா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# உலகில் 6 கோடி மக்கள் வறுமையால் வாடுவர்!

## கொரோனாவால் இந்த நிலை என்கிறது உலக வங்கி

கொரோனா பெருந்தொற்று நோய் காரணமாக உலக அளவில் சுமார் 6 கோடி மக்கள் கடுமையான வறுமைக்குள்தள்ளப்படுவார்கள்என்றுஉலகவங்கிஎச்சரித்துள்ளது.

கொரோனா காரணமாக உலகம் முழுவதும் கடுமையான பொருளாதாரப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. வல்லரசு நாடுகளே கொரோனாவால் பெரும் சரிவைச் சந்தித்துள்ளன. அதுபோல் வளர்ந்து வரும் நாடுகளும், ஏழ்மையான நாடுகளும் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

இந்த நிலையில் கொரோனா தொற்று காரணமாக உலக அளவில் சுமார் 6 கோடி மக்கள் கடுமையான வறுமைக்குள் தள்ளப்படுவார்கள் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது. இது குறித்து உலக வங்கி தலைவர் டேவிட் மால்போஸ் கூறியதாவது:-

கொரோனா தொற்று பாதிப்பு மற்றும் வளர்ந்த பொருளாதாரங்கள் மூடப்படுவதால் 6 கோடிக்கும் அதிகமான மக்கள் கடும் வறுமையில் சிக்கி விடுவார்கள்.

சமீபத்திய காலங்களில் வறுமையை ஒழிப்பதில் நாம் செய்துள்ள முன்னேற்றத்தின் பெரும்பாலான பகுதி அகற்றப்படும். உலக வங்கி குழு விரிவான நடவடிக்கைகளை எடுத்து 100 நாடுகளுக்கு அவசர உதவி ஏற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தை மற்ற நன்கொடையாளர்கள் முன் எடுத்துச் செல்லவும் அனுமதிக்கப்படுகிறார்கள். உலகளாவிய நெருக்கடியைச் சமாளிக்கும் ஒரு பகுதியாக 100 வளரும் நாடுகளுக்கு 160 பில்லியன் டொலர் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவிகள் அனைத்தும் 15 மாதங்களில் வழங்கப்படும்.

இந்த 100 நாடுகளில் உலக அளவில் 90 சதவீத மக்கள் உள்ளனர். இவர்களில் 39 நாடுகள் ஆப்பிரிக்காவின் துணை சகாரா பகுதியைச் சேர்ந்தவை. மொத்த திட்டங்களில் மூன்றில் ஒரு பகுதி ஆப்கானிஸ் தான் சாட், ஐதி, நைதர் போன்ற பலவீனமான மற்றும் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்கப்படும். வளர்ச்சிப் பாதையில் திரும்புவதற்கும் சுகாதார அவசர நிலைகளை கையாள்வதற்கும் விரைவான அணுகுமுறைகளை கொண்டிருக்க வேண்டும். சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் சமூகம் ஆகியவற்றை திறம்பட சமாளிக்கும் வகையில் நாடுகளுக்கு ஏற்ப இந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் சுகாதார அமைப்பை வலுப்படுத்தும். உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்கள் வாங்க உதவும் - என்றார்.

# உள்ளாடை மட்டும் அணிந்து பணியாற்றிய தாதி அலுவலர்



## ரஷ்யாவில் சம்பவம்

கொரோனா சிகிச்சைக்காகப் பெண் தாதி ஒருவர் உள்ளாடை மட்டும் அணிந்து பணி புரிந்த புகைப்படம் சமூக வைரலாகி சமூக ஊடகங்களில் தீவிரமாகப் பரவி வருகிறது.

ரஷ்யாவில் கடந்த சில தினங்களாக தினந்தோறும் சராசரியாக 10 ஆயிரம் பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அங்கு பாதித்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்தை தொட்டுள்ளது..

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் இருந்து 100 மைல் தூரத்தில் உள்ள நகரம் துலா. இங்கு கொரோனா வைரசால் பாதிக்கப் பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க அந்த மண்டலத்திற்கான அரசு மருத்துவமனை உள்ளது.

இந்த மருத்துவமனையில் ஆண்கள் சிகிச்சை பெறுவதற்கான தனி வார்டு அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 20 வயது இளம்பெண் ஒருவர் செவிலியராக பணிபுரிந்து வருகிறார். இவர் ஆண் நோயாளிகளுக்கு மருந்து அளிக்கு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

நோயாளிகளிடம் இருந்து கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் இருக்க டாக்டர்கள், நர்ஸ்கள் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (ஊணூசி) அணிந்துதான் பணிபுரிகிறார்கள். இதை சரியாக பயன்படுத்த தவறினால் கூட கொரோனா தொற்றிற்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படும்

பெரும்பாலான பாதுகாப்பு ஆடைகள் கண்ணாடிஇழை போன்றுதான் இருக்கும். உள்ளே அணியும் உடைகள் வெளியே தெளிவாக தெரியும். அந்த இளம் தாதி, தாதியர் உடை அணிந்து அதன்மீது கொரோனா தடுப்பு உடையை அணிந்தால் அசௌகரியமாக இருக்கும். அதேவேளையில் வெப்பம் அதிகமாகி வியர்க்கும் எனக்கருதி உள்ளாடைகளை மட்டும் போட்டுக்கொண்டு அதன்மேல் கொரோனா தடுப்பு ஆடைகள் அணிந்து பணிபுரிந்துள்ளார்.

தாதி அப்படிச் செல்லும்போது தடுப்பு ஆடையைத் தாண்டி உடல் அப்பட்டமாக வெளியே தெரியும் என அவர் அறிந்திருக்கவில்லை. நோயாளிகள் இது குறித்து புகார் ஏதும் செய்யவில்லை. இந்தப் படம் எப்படியோ வெளியில் கசிந்து வைரலாகி வருகிறது.

ஆனால், தாதி அவர்களுக்கான ஆடைகளை கட்டாயம் அணிந்து வேலை செய்ய வேண்டும். அதை செய்யத் தவறிய அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. டுலா பகுதியில் 2 ஆயிரத்து 637 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

# அழாத காதலனை பழிவாங்க வெங்காயம் அனுப்பிய காதலி



## சீனாவில் விநோதச் சம்பவம்



காதலனைப்பழிவாங்க ஒரு டன் வெங்காயத்தை காதலி அனுப்பி வைத்த வேடிக்கையான சம்பவம் நடந்துள்ளது.

சீனாவில் நேற்று (மே 20ஆம் திகதி) காதலர் தினம் கொண்டாடப்படுகிறது. தன்னை ஏமாற்றிய தன் முன்னாள் காதலன் தன்னைப் போலவே அழ வேண்டும் என்பதற்காக அவர் வீட்டுக்கு ஆயிரம் கிலோ வெங்காயத்தை அனுப்பி வைத்தார் ஓர் இளம்பெண்.

சீனா ஷாண்டோங் மாநிலம் ஜிபோ பகுதியை சேர்ந்த பெண் ஜாவோ நீண்ட நாட்களாக ஒருவரை காதலித்து வந்தார். தனது காதலனுடன் காதலர் தினத்தை கொண்டாட மிகுந்த எதிர்பார்ப்பில் இருந்தார். ஆனால் அவரது காதலர் அவரை ஏமாற்றி விட்டார். காதலரை பிரிந்தபோது மூன்று நாட்களாக கண்ணீர் விட்டு அழுதுள்ளார்.

இந்த நிலையில், காதலர் இந்த பிரிவுக்கு வேதனைப் படவில்லை என்பது நண்பர்கள் மூலம் தெரியவர, ஜாவோவுக்கு கடும் கோபம் ஏற்பட்டது.

உடனே 1000 கிலோ வெங்காயத்தை வாங்கி அதனைத் தன் முன்னாள் காதலர் வீட்டுக்கு அனுப்பி வைத்தார். அதில் ஒரு கடிதத்தையும் இணைத்திருந்தார் அவர். அந்த கடிதத்தில், "நான் மூன்று நாள்கள் அழுதேன், இப்போது உன்னுடைய முறை" என்று எழுதப்பட்டிருந்தது.

ஜாவோவின் காதலர் வெங்காயத்தைப் பார்த்து திகைத்துப்போய் நிற்கும் புகைப்படம் ஒன்று வெளியாகியுள்ளது. அத்துடன் வெளியாகியுள்ள வீடியோ ஒன்றில், 1000 கிலோ வெங்காயத்தை ஜாவோவின் முன்னாள் காதலன் வீட்டுக்கு டிரக் ஒன்று டெலிவரி செய்வதையும் காண முடிகிறது. ஜாவோவின் முன்னாள் காதலன் தனது முன்னாள் காதலியை வித்தியாசமானவர் என்று கூறினாலும், நான் அழாததற்காக நான் ஒரு மோசமான மனிதனா? என கேள்வி எழுப்பி உள்ளார்.

அக்கம்பக்கத்தினர் வெங்காயம் அழுகி துர்நாற்றம் வீசுவதாகக் காதலன் மீது குற்றம்சாட்டியுள்ளனர்.



# தடுப்பூசியாக இல்லாத மருந்து கொரோனாவுக்கு கண்டுபிடிப்பு

தடுப்பூசி இலலாமலேயே கொரோனாவைத் தடுக்க மருந்து ஒன்றைக் கண்டுபிடித்துள்ளதாக சீனா ஆய்வகம் தெரிவித்துள்ளது.

உலகை அச்சுறுத்தி கொண்டிருக்கும் கொரோனா வைரசை தடுக்க தடுப்பூசி மற்றும் மருந்தை கண்டுபிடிப்பதில் உலக நாடுகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

சீனாவும் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் தடுப்பூசி இல்லாமலேயே கொரோனாவை தடுக்க மருந்து ஒன்றை கண்டு பிடித்துள்ளதாக சீனா ஆய்வகம் தெரிவித்துள்ளது.

சீனாவின் முன்னணி பல்கலைக்கழகமான பீக்கிங் பல்கலைக்கழக ஆய்வத்தில் விஞ்ஞானிகள் இந்த மருந்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த மருந்து மூலம் கொரோனா வைரசில் இருந்து பாதிக்கப்பட்ட நபர் குணமடைவது மட்டுமல்ல, கொரோனாவுக்கு எதிராக குறுகிய காலத்துக்கு நோய் எதிர்ப்பு சக்தியையும் பெற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பாதித்த எலியின் உடலில் இந்த மருந்தை செலுத்திய போது 5 நாட்களில் வைரஸ் எண்ணிக்கை பல மடங்கு குறைந்தது என்றும், இந்த ஆண்டு இறுதியில் இந்த மருந்து தயாராகி விடும் என்றும் சீனப் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், விஞ்ஞானி சன்னிஜி தலைமையிலான குழு இந்த மருந்தை உருவாக்கி உள்ளது. முதலில் விலங்குகளுக்கு இதை கொடுத்து பரிசோதிக்கப்பட்டது.

பின்னர் இந்த மருந்து 19 கொரோனா வைரஸ் நோயாளிகளுக்கு கொடுக்கப்பட்டது. வைரசுக்கு எதிராக இந்த மருந்து தீவிரமாகப் போராடுகிறது. உடலில் கொரோனா வைரஸ் பரவுவதை அதிரடியாக தடுக்கிறது. மேலும் உடலில் உள்ள நுண்ணுயிர் எதிர்ப்பு சக்தியையும் நடுநிலையாக்குகிறது.

இந்த மருந்தை கொரோனா பாதித்த ஒருவருக்கு செலுத்தும் போது அடுத்த 5 நாட்களில் அந்த வைரசின் எண்ணிக்கையான 2 ஆயிரத்து 500க்கும் கீழ் குறைகிறது. இந்த மருந்து தொடர்ந்து சோதிக்கப்பட்டு மேலும் மேன்படுத்தவும் முயற்சிகள் நடந்து வருகிறது.

# மே மாதம் 25 ஆம் திகதி முதல் இந்தியாவில் விமான சேவை



இந்தியாவில் மே 25ஆம் திகதி முதல் உள்நாட்டு விமான சேவைகள் மீண்டும் தொடங்கப்படும் என விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொரோனா அச்சுறுத்தல் காரண மாக நாடு முழுவதும் ஊரடங்கு நடை முறையில் உள்ளதால் சாலை, ரயில் மற்றும் விமான போக்குவரத்து அனைத் தும் முடங்கிப்போயுள்ளன.

தற்போது மெல்ல மெல்ல ஊரடங்கில் சில தளர்வுகள் அறிவிக் கப்பட்டு வருகின்றன. மாநிலங் களுக்குள் சாலை போக்குவரத்துக் கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நாடு முழுவதும் அடுத்த மாதம் முதல் குறிப்பிட்ட எண்ணிக் கையிலான ரயில் சேவைகளும் தொடங்கப்பட உள்ளது.

ஆனால், விமான போக்குவ ரத்து தொடர்பாக எந்தவித அறிவிப் புகளும் வெளியிடப்படாமல் இருந்து வந்தது.

இந்த நிலையில், நாடு முழுவதும் மே 25 ஆம் திகதி முதல் குறைவான எண்ணிக்கையில் உள்நாட்டு விமான சேவைகள் தொடங்கப்படும் என விமா னப்போக்குவரத்து துறை அமைச்சர் ஹர்தீப்சிங் பூரி தனது டுவிட்டர் பக்கத் தில் தெரிவித்துள்ளார்.

# பஸ் கட்டணம், மதுபான விலைகள் கேரள அரசினால் நேற்று அதிகரிப்பு

கேரளாவில் பஸ் கட்டணம் 50 சத வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மதுபானங் களுக்கு 10 முதல் 35 சதவீதம் வரை கூடுதல் வரி விதிக்கப்பட்டுள்ளது.

கேரள போக்குவரத்து துறை அமைச் சர் சசீந்திரன் கூறும்போது, கேரளாவில் இன்று முதல் பஸ்களை இயக்க முடிவு செய்துள்ளோம். டிக்கெட் கட்டணம் 50 சதவீதம் அதிகரிக்கப்பட்டு உள்ளது.

தனியார் பஸ் நிறுவனங்கள் கூறுவது போல 100 சதவீத கட்டண உயர்வை அறிவிக்க முடியாது.

பயணிகள் மீது அதிக சுமையை ஏற் றக்கூடாது. அதேநேரம் பஸ் அதிபர்க ளும் பாதிக்கப்படக்கூடாது. இதற்காக அவர்களுக்கு வரி சலுகைகள் அறிவித்து உள்ளோம் - என்றார்.

கேரளாவில் மதுக் கடைகள் நாளை திறக்கப்பட உள்ளது. மதுபானங்களை வாங்க வாடிக்கையாளர்களுக்கு டிஜிட் டல் டோக்கன் வழங்கவும் ஏற்பாடு செய் யப்பட்டு உள்ளது. மது வாங்க விரும்பு வோர் அதற்கான ஆப்பை பதிவிறக்கம் செய்ய வேண்டும். அதில் பதிவு செய் தால் டிஜிட்டல் டோக்கன் வழங்கப்படும்.

டோக்கன் பெற்றுக்கொண்ட 24 மணி நேரத்தில் அருகில் உள்ள ஏதா வது ஒரு மதுக்கடைக்கு சென்று மது வாங்கி கொள்ளலாம் என்று அரசு அறி வித்து உள்ளது.

இதன்மூலம் மது கடைகளில் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை இருக்காது என்றும் கூறப்பட்டு உள்ளது.

இதுபோல மது பானங்களுக்கு 10 முதல் 35 சதவீதம் வரை கூடுதல் வரி விதிக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் பிராந்தி, விஸ்கி, ரம் வகைகள் பாட்டிலுக்கு குறைந்தபட்சம் ரூ. 90 முதல் அதிகபட் சம் ரூ.150 வரை உயரும்.

# அரசியல்வாதியும் அவரது மகனும் பட்டப்பகலிலேயே சுட்டுக்கொலை

## உத்தரப் பிரதேசத்தில் சம்பவம்

உத்தரபிரதேசத்தில் அரசியல்வாதி ஒருவரும் அவரது மகனும் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியது.

உத்தரபிரதேச மாநிலம் சாம்பல் மாவட்டத்தில் உள்ள சாம்சோயி கிராமத்தைச் சேர்ந்தவர் சோட் லால்திவாகர். சமாஜ்வாடி கட்சியின் முக்கிய பிரமுகரான இவர் 2017ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அந்தக் கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

தற்போது இவரது மனைவி அந்தக் கிராமத்தில் பஞ்சாயத்துத் தலைவராக உள்ளார். இந்த் நிலை யில் நேற்றுமுன்தினம் திவாகரும், அவரது மகன் சுனிலும் அந்த கிராமத்தில் அமைக்கப்பட்ட சாலை யைப் பார்வையிடச்சென்றனர்.

தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் அமைக் கப்பட்டிருந்த சாலையை இருவரும் பார்வையிட்ட போது, அதேபகுதியை சேர்ந்த சிலர் திவாகருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

சிறிது நேரத்தில் வாக்கு வாதம் முற்றி மோதலாக மாறியது. அப்போது திடீரென 2 பேர் கையில் வைத்தி ருந்த துப்பாக்கியால் திவாகர், சுனில் ஆகியோரை சுட்டுக்கொன்றனர்.

பட்டப்பகலில் நடைபெற்ற இந்த சம்பவம் அப்பகுதி யில் பதற்றத்தை ஏற்படுத்தியது. சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்து வந்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில் திவாகர், சுனில் ஆகியோரை சுட்டுக் கொன்றதில் ஒருவர் அப்பகுதியை சேர்ந்த சவீந்தர் என்பது தெரிய வந்தது. தப்பி ஓடிய சவீந் தரையும், அவனது கூட்டாளியையும் பொலிஸார் கைது செய்தனர்.

சாலை அமைக்கும் தகராறில் இந்தக் கொலைகள் நடந்தது தெரிய வந்தது. தொடர்ந்து இருவரிடமும் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே சவீந்தரும், அவனது கூட்டாளியும் துப்பாக்கியால் திவாகரை மிரட்டுவதும், அவர்களை நோக்கிச் சுடுவதுமான காணொலிக் காட்சிகள் சமூக ஊடகங்களில் தீவிரமாகப் பரவி வருகிறது.

# பெங்களூர் மக்களை கலங்கடித்த இதுவரையில்லாத பயங்கர சத்தம்



பெங்களூரின் பல்வேறு பகுதிகளில் இன்று மதியம் கேட்ட மர்மமான பயங்கரச் சத்தத்தால் மக்கள் அச்சமடைந்தனர்.

கொரோனா வைரஸ் ஒரு பக்கம், அம்பன் புயல் ஒரு பக்கம் என மக்கள் பல்வேறு பிரச்சி னைகளால் கலங்கிப்போயுள்ள மக்கள் இந் தத் சத்தத்தால் மேலும் அதிர்ந்துபோயினர்.

கர்நாடக மாநிலம் பெங்களூரு நகரின் பல்வேறு பகுதிகளில் இன்று மதியம் 1 மணி யளவில் இந்தப் பயங்கர சத்தம் கேட்டது. இரைச்சல் மிகுந்த அந்தச் சத்தத்தை யாரா லும் தெளிவாக அடையாளப்படுத்த முடிய வில்லை.

மக்கள் யாரும் இதுவரை கேட்டிராத வகையிலான அந்த மர்ம சத்தம் பல முறை ஒலித்தது. இந்த பயங்கர சத்தத்தால் வீட்டின் கதவுகள், ஜன்னல்கள் அதிர்ந்தன.

இடி இடித்தால், வெடிகுண்டு வெடித்தால் ஏற்படும் சத்தம் போன்றும் நிலநடுக்கத்தால் ஏற்படும் சத்தம் போன்றும் அந்த ஒலி இருந்தது என்று மக்கள் பலவாறாகத் தெரிவித்தனர்.

போர் விமானங்கள் குறிப்பாக மிராஜ் ரக விமானங்கள் பறந்தால் ஏற்படும் சோனிக் பூம் என்ற சத்தம் போன்று இது உணரப்பட்டதாக வும் சிலர் கூறினர். ஆனால், அந்த நேரத்தில் எந்த போர் விமானங்களும் வானில் பறக்க வில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையில், அம்பன் புயலால் ஏற்பட்ட வளிமண்டல வெடிப்புக் காரணமாக இந்த பயங்கர சத்தம் எதிரொலித்திருக்கலாம் என வானிலை மைய நிபுணர்கள் தெரிவித்துள் ளனர்.

இதற்கிடையில், பெங்களூரில் இன்று ஏற்பட்ட பயங்கர சத்தம் தொடர்பாக விசாரணை நடத்த அவசியம் ஏற்பட்டுள்ளதாக கர்நாடக மாநில பேரிடர் மேலாண்மை அதிகாரி தெரிவித் துள்ளார்.

# 20 பேருக்கு மேல் பேருந்தில் இனி ஏற இந்தியாவில் தடை

பேருந்தில் ஒருபோதும் 20 பயணிகளுக்கு மேல் ஏற்றக்கூடாது. பயணிகள் இறங்க மறுத்தால் போலீஸ் உதவியை நாடலாம் என டெல்லி மந்திரி தெரிவித்துள்ளார்.

4 வது பொது முடக்கத்தின்போது மாநில அரசுகள் விரும்பினால் பயணிகள் பேருந்தை இயக்கலாம் என மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்தது. அதன டிப்படையில் ஒவ்வொரு மாநில அரசுகளும் பஸ்களை இயக்கி வருகின்றன. ஆனால் சமூக இடைவெளியுடன் 20 பயணிகள் மட்டுமே பயணம் செய்ய வலியுறுத் தப்பட்டுள்ளது.

சில நேரங்களில் 20 இற்கும் மேற்பட்ட பயணிகள் ஏறியபின் இறங்க மறுக்கலாம். அந்த நேரத்தில் டிரைவர் அல்லது கண்டக்டர் போலீஸை அனுகலாம் என்று டெல்லி மாநில போக்குவரத்து மந்திரி கைலாஷ் கேலாட் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

டெல்லி அரசு பேருந்து பயணத்தின்போது சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக உள்ளது. 20 பேருக்கு மேல் பேருந்தில் ஏறக்கூடாது என்பதை கண்டக்டர் மற்றும் டிரைவர் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.

முதல்நாளில் 3 ஆயிரத்து 400 பஸ்கள் (கிளஸ்டர் பஸ் உள்பட) இயக்கப்பட்டன. இதில் ஆயிரத்து 400 பேருந்துகள் பொலிஸார் மற்றும் அரசு ஊழியர்கள் சென்றுவர வாடகைக்காக அமர்த்தப்பட்டன. இந்த சூழ் நிலை இன்னும் இரண்டு மூன்று நாட்களில் சரியாகும்.

பொதுமக்கள் ஆட்டோ, பேருந்து, இரு சக்கர வாக னங்களில் செல்லும்போது விதிமுறைகளை மீறக்கூடாது. அப்படி ஏதாவது நடைபெற்றால் நடவடிக்கை எடுக்கப் படும் - என்றார்.



# தமிழ்நாட்டில் நேற்று சதமடித்த வெப்பம்!

தமிழ் நாட்டில சென்னை உள்பட 12 இடங்களில் இன்று வெப்பம் 100 டிகிரி ஃபாரன் ஹீட்டுக்கு மேல் பதிவானதால் மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளா கினர்.

வங்கக்கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் அதி தீவிர புயலாக மாறி இன்று மாலை மேற்கு வங்காளம் - பங்களாதேஷ் இடையே கரை யைக் கடந்தது.

புயல் காற்று ஈரப்பதம் அனைத்தையும் இழுத் துக் கொண்டதால் இரண்டு நாட்களுக்கு வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும் என சென்னை வானிலை மையம் தெரிவித்திருந்தது.

கடந்த சில நாட்களாக ஒன்றிரண்டு இடங்களில் வெப்பம் 100 டிகிரி ஃபாரன் ஹீட்டை தாண்டியது. ஆனால் இன்று 12 இடங்களில் 100 டிகிரியை தாண்டியது. சென்னை மீனம்பாக்கம் மற்றும் திருத்தணியில் அதிகபட்சமாக 107.8 டிகிரி ஃபாரன் ஹீட் வெப்பம் பதிவானது.

வீட்டில் இருந்த மக்கள் வெப்பத்தை தாங்க முடியாமல் அவதிப்பட்டனர். மின் விசிறியில் இருந்து வரும் காற்றும் சூடாக இருந்ததால் மிகுந்த வேதனை அடைந்தனர்.

# அத்தனை பேரும் உத்தமர்தானா?

- கம்பவாரிதி இலங்கை. ஜெயராஜ் -

உலகம் கொரோனாவால் கொந்தளித்துக் கொண்டிருக்க,
ஈழத்தமிழினத்தார் மத்தியில் விறுவிறுப்பாக வேறு கொந்தளிப்பு.
கொந்தளிப்பை ஏற்படுத்தி இருப்பவர்,
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம் ஏ.சுமந்திரன் அவர்கள்.
சிங்களத் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியில்,
அவர் வெளியிட்ட சில கருத்துக்களால்,
உணர்ச்சிமிக்க (?) ஈழத்தமிழினத்தார் கொந்தளித்துக் கிடக்கிறார்கள்.
அறிக்கைகள், பேட்டிகள் இணையப் பதிவுகள் என,
வெளிவரும் வீராவேசமான பலரது வெளிப்பாடுகள்,
கடந்த மாதங்களில் செய்தியுலகை ஆக்கிரமித்திருந்த
“கொரோனா வைரஸ்ஸை” ஓரளவு ஓரங்கட்டியிருக்கிறது.

***

பதவிப் போட்டி, ஆளுமைப் போட்டி, அறிவுப் போட்டி என,
பல்வகையாலும் சுமந்திரனோடு கயிறிழுத்துக் கொண்டு இருந்தவர்கள்,
மேற் செய்தி கிடைத்ததும்,
வாழைப்பழம் வழுக்கி வாயில் தானாய் விழுந்தாற் போல,
தம் இஷ்டத்திற்கு சப்பித்துப்பிச் சதிராடிக் கொண்டிருக்கின்றனர்.

***

இந்நிலையில்,
நீங்கள்தானே சுமந்திரனின் “வால்கள்”;
சுமந்திரனுக்கு விருது கொடுத்து மூக்குடைபட்டீர்களா ?
சுமந்திரனின் மூலம் அரசியலில் நுழையும் உங்கள் கனவு “அம்பேலா” ?
என்றெல்லாம் தம் இஷ்டத்திற்கு கதை வசனம் எழுதி,
துக்கம் விசாரிக்குமாற் போல்,
தம் சந்தோஷத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் சில பேர்.

***

இவையெல்லாம் ஒன்று சேர்ந்து
மீண்டும் என்னை அரசியற் கட்டுரை ஒன்றை எழுத வைத்திருக்கிறது.
சுமந்திரனின் பேட்டி பற்றிய என் எண்ணப் பகிர்வை வெளியிடுவதற்கு முன்பாக,
முன்பு பலதரமாய் நான் சொன்ன சில கருத்துக்களை,
மீண்டும் இங்கு பிரமாணப்படுத்த விரும்புகிறேன்.
முதலாவது விடயம், நான் சுமந்திரனின் ஆதரவாளன் அல்லன்,
எம் இனத்தின் ஆதரவாளன் என்பது.
இரண்டாவது விடயம், அரசியலினுள் மூக்கை நுழைக்கும் எண்ணம்,
எனக்கு கிஞ்சித்தும் இல்லை என்பது.
மூன்றாவது விடயம், நான் எம் இனத்தின் எந்த அரசியல் அணிக்கும்
எதிரானவன் அல்லன் என்பது.
பாரதி தன் சுயசரிதையில் சொன்னாற் போல மேல் உண்மைகளை,
நாற்பதாயிரம் கோயிலில் சொல்லவும் நான் தயாராய் இருக்கிறேன்.

***

இனி விடயத்துக்கு வருவோம்.
முதலில் சுமந்திரனின் அந்த பேட்டி பற்றிய எனது தனிப்பட்ட கருத்தை,
இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.
பத்திரிகா தர்மத்தை மீறி, இனங்களுக்குள் பகை மூட்டும் நோக்கத்துடனும்,
சுமந்திரனை தனிப்பட்ட ரீதியில் வீழ்த்தும் நோக்கத்துடனும் எடுக்கப்பட்ட பேட்டி அது.
அந்தப் பேட்டியைச், சுமந்திரன் சரியான முறையில் கையாளவில்லை என்பது என் கருத்து.
பேட்டியாளன் தன்மானத்தைத் தூண்டிவிட, அதற்கு பலியான சுமந்திரன்,
தன் சமநிலைதவறி, அவசர அவசரமாய்ப் பதிலளிக்க விழைந்தமையே
மேற் பிரச்சினையின் காரணம் என்று கருதுகிறேன்.
தன்னை வீழ்த்தும் நோக்கமாய்க் கேள்விகள் கேட்கப்படுவதை உணர்ந்ததும்,
அவனது கேள்விகளுக்கு பதிலளிப்பதை சுமந்திரன் உடன் நிறுத்தியிருக்க வேண்டும்.
“பெரும் போரால் பாதிப்புற்ற ஓர் இனத்தின் எதிர்கால எழுச்சிக்காய் முயன்று கொண்டிருக்கிறேன்.
இறந்தகாலச் செய்திகளைக்கிளறி விட்டு நீ இனப்பகையை ஊட்டவும்,
எம் தமிழினத்தலைமைகளுக்குள் பகை மூட்டவும் முயற்சிக்கிறாய்.
உனது நோக்கம் தவறு!
அதனால் உனது கேள்விகளுக்கு என்னால் பதிலளிக்க முடியாது!” என்று கூறிவிட்டு,
பேட்டியை முறித்துக் கொண்டு சுமந்திரன் எழுந்திருக்க வேண்டும்.
தன்மானத் தூண்டுதலுக்கு ஆளானதால்,
அடுத்தடுத்து பதிலளிக்கப் புறப்பட்டு தவறிழைத்திருக்கிறார் சுமந்திரன்.

***

தமிழ் நாட்டில் அண்மையில் வெளியான,
“திரௌபதி” என்ற திரைப்படத்தின் இயக்குநரை,
“கலாட்டா” எனும் “யூ டியூப் சனலின்” ஊடாக பேட்டி கண்ட ஒருவர்,
எல்லை மீறி கேள்விகள் தொடுக்க,
அவர் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாதெனத் துணிவாய் நிராகரித்து விட்டு,
கம்பீரமாக அந்த இயக்குநர் வெளியேறிய பதிவினை,
“யூ டியூப்பில்” பார்க்க முடிந்தது.
சுமந்திரனும் அந்தப் பேட்டியை,
அவ்வாறு தான் எதிர் கொண்டிருக்க வேண்டும் என்பதே எனது கருத்து.

***

இன்னும் இரண்டு விடயங்களைச் சொல்ல வேண்டி இருக்கிறது.
ஒன்று, பேட்டியில் சுமந்திரன் சொன்ன விடயங்கள் பற்றியது.
அடுத்தது, சுமந்திரனை எதிர்ப்போர்தம் கருத்துக்கள் பற்றியது.
அவற்றை ஒவ்வொன்றாய்ப் பார்போம்.

***

சுமந்திரன் சொன்ன கருத்துக்களில்
சர்ச்சைக்கு ஆளாகியிருக்கும் விடயங்கள் மூன்று,
1.தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு புலிகளால் உருவாக்கப்படவில்லை என்பது.
2.ஆயுதப் போராட்டத்தை தான் ஆதரிக்கவில்லை என்பது.
3.சிங்கள மக்களோடு இணைந்து வாழவே விரும்புகிறேன் என்பது.
சுமந்திரனின் இம்மூன்று கருத்துக்கள் பற்றியும் ஆராய்வது அவசியமாகிறது.

***

கூட்டமைப்பு புலிகளால் உருவாக்கப்படவில்லை என்ற விடயத்தில்,
தேவையில்லாமல் உண்மையை மறைக்கத் தலைப்பட்டு,
முன்னுக்குப்பின் முரணாகப் பேசி,
மற்றவர்கள் நகைக்கும்படியாக கருத்துக்களை வெளியிட்டு,
சுமந்திரன் தன்னைத் தானே தாழ்த்திக் கொண்டுள்ளார்.
கூட்டமைப்பு புலிகளால் உருவாக்கப்பட்ட உண்மை உலகறிந்தது.
தன் தலைவரான சம்பந்தரைப் பின்பற்ற நினைந்து,
அந்தப் பெரிய பூசணிக்காயை சோற்றில் மறைக்க முற்பட்டு,
இழிவுபட்டிருக்கிறார் சுமந்திரன். இது அவருக்கு வேண்டாத வேலை.
அரசியல்வாதியாக மட்டுமன்றி, ஓர் வக்கீலாகவும் அவர் அடைந்திருக்கும் தோல்வி இது.

***

அடுத்தது, ஆயுதப் போராட்டத்தைத் தான் ஆதரிக்கவில்லை என்ற அவரது கருத்து.
அக்கருத்தை அவர் வெளியிட்டதில் தவறிருப்பதாக எனக்குப்படவில்லை.
அது அவரது தனிப்பட்ட சொந்தக்கருத்து.
ஆயுதப் போராட்டம், நம் இனம் விரும்பி ஏற்றுக் கொண்ட ஓர் பாதை அல்ல.
அந்தப் பாதை நோக்கி, எம் இனம் தள்ளப்பட்டது என்பதே உண்மை.
அடுத்தடுத்து எம் எதிரிகள், எம் இனத்தின் மேல் கட்டவிழ்த்து விட்ட வன்முறைகள்தான்,
எம் இளைஞர்களை ஆயுதப் போராட்டப் பாதைக்குத் திருப்பியது என்பதே வரலாறு.
ஆயுதப் போராட்டப் பாதை எம் இனத்தின் மேல் திணிக்கப்பட்ட பாதை.
வன்முறை நிறைந்த அப்பாதை, எதிரிகளைக் கையாள அப்போது தேவைப்பட்டது,
அது வேறு விடயம்.
அப்பாதையை எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என வலியுறுத்தும் உரிமை
எவர்க்கும் இல்லை என்றே நான் கருதுகிறேன்.
ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாது விடுவதும் அவரவர் உணர்வு சார்ந்த விடயம்.
இன உரிமைப் போராட்டத்தை நிராகரித்தால்தான் அது தவறாகும்.
போராட்டப் பாதையை அவரவர் விருப்பப்படி யாரும் தீர்மானிக்கலாம்.
முன்னர் தமிழ்த்தலைவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த சாத்வீகப் போராட்டப் பாதையை
பின்னர் இயக்கத்தலைவர்கள் வன்முறைப் போராட்டப்பாதையாக மாற்றவில்லையா?
அதுபோலத்தான் இதுவும்!
எனவே அக்கருத்தை சுமந்திரன் வெளியிட்டதில் தவறில்லை என்றே கருதுகிறேன்.

***

சுமந்திரனின் மேற்கருத்துக்காய்க் கோபப்படும் அரசியற் தலைமைகளிடமும்,
தனிமனிதர்களிடமும் ஒன்று கேட்க வேண்டும் என மனம் தூண்டுகிறது.
இக் கருத்திற்காய்க் கோபப்படும் நீங்கள்,
இன்றும் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா ?
ஏற்றுக் கொள்கிறீர்கள் என்றால், அதை இன்று பகிரங்கமாக உங்களால் அறிவிக்க முடியுமா ?
எதிரிகளை வன்முறையால் வெல்லும் பலம் இன்று எம்மிடம் இருக்கிறதா ?
ஏலவே வன்முறைப் போராட்டத்தால் அடைந்த பாதிப்புக்களில் இருந்து மீளாத நம் மக்கள்,
மீண்டும் ஓர் வன்முறைப் போராட்டத்திற்கு உடன்படுவார்களா ?
இத்தனை கேள்விகளுக்கும் “இல்லை” என்பது தான் உண்மைப் பதில்.
“ஆம்” என்பது போல் பேசுகிறவர்கள் பொய் பேசுகிறார்கள்.
அப் பொய், நாடாளுமன்றப் பதவிகள் நோக்கியது.
மக்களும் பாவம், அவர்களின் பொய்களை நம்பி வீணாய் உணர்ச்சிவயப்படுகிறார்கள்.
ஆயுதப் போராட்டத்தை ஏற்பது பற்றிய தனது சொந்தக் கருத்தை,
தன் உணர்வு சார்ந்து சுமந்திரன் சொல்லியிருக்கிறார்.
அவர் சொன்ன பதிலில் தவறில்லை என்றே படுகிறது.
நம் எல்லோரதும் உள்ளத்தில் உள்ள பதிலும் அதுவே என்பது தான் உண்மைநிலை.

***

அடுத்தது சிங்கள மக்களோடு இணைந்து வாழ விரும்புவதாய்
சுமந்திரன் சொன்ன விடயம் பற்றியது
ஆயுதப் போரில் தோல்வி அடைந்த பின்னர்,
சிங்கள மக்களோடு இணைந்து வாழ்வதைத் தவிர வேறு வழியேதும் இருக்கிறதா?
இதுபற்றி, சுமந்திரனின் பேட்டி கண்டு கொந்தளிக்கும் தமிழ் அரசியல் தலைமைகள்,
வெளிப்படையாக மக்கள் மன்றில் இல்லை என்ற பதிலைச் சொல்ல முடியுமா ?
இலங்கை நாடாளுமன்றம் என்பது இலங்கையில் வாழும் அனைத்து இனங்களினதும்,
இணைப்பின் அடையாளமாக இருக்கும் ஒன்று.
சிங்கள மக்களோடு இணைந்து வாழ விரும்பவில்லை என்று கூறும் அரசியற் தலைவர்கள்,
நாம் நாடாளுமன்றத்துக்குள் நுழையமாட்டோம், தேர்தலை நிராகரிப்போம் எனக் கூறி,
நாடாளுமன்றத்திற்கு வெளியே நின்று, இனவிடுதலைக்காய் போராட முன்வருவார்களா?
இவர்கள் வெளிக்காட்டும் அனைத்து உணர்ச்சிகளும்,
பாராளுமன்ற இருக்கைகளை கைப்பற்றுவதற்காகவே என்பது வெளிப்படை.
இந்நிலையில் சுமந்திரனுக்கு எதிராக அவர்கள் காட்டும் பொய் உணர்ச்சி,
நகைப்பைத்தான் தருகிறது.

***

இனி, சுமந்திரனைத் தூற்றி நிற்கும் உள்நாட்டு, புலம்பெயர் தமிழர்களை நோக்கியும்,
இங்குள்ள தலைமைகளை நோக்கியும் பொதுவாகச் சிலவற்றைக் கேட்க வேண்டி இருக்கிறது.

***

# அத்தனை பேரும் ................

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

- கம்பவாரிதி இலங்கை. ஜெயராஜ் -

முதலில் பொதுமக்களை நோக்கிய எனது கேள்விகள்.
மனச்சாட்சியில் கைவைத்துச் சொல்லுங்கள்.
உங்களில் எத்தனை பேர்,
புலிகளுக்கும் அவர்களின் ஆயுதப் போராட்டத்திற்கும்
உண்மை விசுவாசிகளாய் இருந்தீர்கள்?
ஆயுதப் போராட்டம் நடந்து கொண்டிருந்த பொழுது,
அதில் உங்களின் பங்களிப்பு எந்த அளவாய் இருந்தது ?
ஆயுதம் வாங்கவெனப் புலிகள் பவுண் சேர்த்தபோது
உங்களில் எத்தனைபேர் மனமொப்பி அதனை மகிழ்ச்சியோடு கொடுத்தீர்கள்?
புலிகள் அக்காலத்தில் விதித்த கட்டுப்பாடுகளை எத்தனைபேர் முழுமனதோடு ஏற்றீர்கள்?
புலிகள் பயணக்கட்டுப்பாடு விதித்திரா விட்டால்
உங்களில் எத்தனைபேர் எம் மண்ணில் நின்றிருப்பீர்கள்?

***

அடுத்து, புலம்பெயர் தமிழர்களிடமும் சில கேட்கவேண்டியிருக்கிறது.
இல்லாத புலித்தொடர்பைச் சொல்லி,
வெளிநாடுகளில் ‘விசா’ எடுக்க முயலாதவர்கள் உங்களில் எத்தனைபேர் ?
புலிகளின் நிர்வாகத்தில் நம் மண் இருந்த காலத்தில்,
விடுமுறைக்கு இலங்கைக்கு வந்தவேளைகளில்,
புலிகளுக்குப் பணம் கொடுக்க வேண்டிவரும் என்ற பயத்தில்,
தாய் மண்ணை மிதிக்கக்கூட விரும்பாமல்,
வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்த உங்கள் உறவுகளைக்
கொழும்பிற்கு அழைத்துப் பார்த்துவிட்டு மீண்டு ஓடாதவர்கள் எத்தனை பேர் ?
இறுதிப் போர்க் காலத்தில் வன்னியில் வாழ்ந்த உறவுகளை,
அரச செல்வாக்குகளைப் பயன்படுத்தி மீட்டெடுத்து,
வெளிநாட்டிற்கு அழைக்காதவர்கள் எத்தனைபேர்?
விதிவிலக்காக இருக்கும் ஒருசிலரைத்தவிர
இவற்றையெல்லாம் நாம் செய்யவில்லை என்று,
உங்களால் சொல்லமுடியுமா ?

***

போராட்டத்திற்கு ஆதரவாளர்களாக உங்களை இனங்காட்டி,
மறைந்த போராளிகளுக்காய் உணர்ச்சிக் கூச்சலிடும் உங்களிடம்,
இன்னொன்றையும் கேட்க வேண்டி இருக்கிறது.
நம் மண் மீட்பிற்காய் போராடத் தலைப்பட்ட,
அத்தனை இயக்கங்களிலும் இணைந்த, அனைத்து போராளி இளைஞர்களும்,
நம் மண்ணிற்காய்ப் போராடத் தலைப்பட்டவர்கள் தானே ?
அவர்கள் பற்றி என்றாவது நீங்கள் கவலைப்பட்டதுண்டா ?
தலைமைகள் தவறிழைத்திருக்கலாம்.
மண்ணிற்காய் போராடத்தலைப்பட்ட அந்த இளைஞர்கள் என்ன தவறு செய்தார்கள்?
எந்த ஆயுதக்குழுத்தலைமையாவது தன் கீழிருந்த போராளிகளின் கருத்தைக் கேட்டு,
எப்போதேனும் இயங்கியது உண்டா ?
அப்படி இருக்க மாற்றியக்கப் போராளிகளை நாம் மறந்தது நியாயமாகுமா?
நமது இன உணர்ச்சிகள் எல்லாம் வென்றவர்களுக்காக மட்டும்தான் குமுறும்.
வலியர்களை வழிமொழிய மட்டும்தான் பொய்யான எமது இன உணர்வு வழிவிடும்.
எமது இந்தப் பொய்மைதான், பிற்காலத்தில் இயக்கங்களையும் பற்றியது என்று நினைக்கிறேன்.
இந்த ஒழுங்கில் தாம் வாழ்ந்து கொண்டு விடுதலை உணர்ச்சி பேசுவோரைக் காண,
நகைப்புத்தான் வருகிறது.

***

இனி சுமந்திரன்மேல் கோபித்துக் கூச்சலிடும்,
மாற்றணித் தலைவர்களிடமும் சில கேள்விகளை கேட்கவேண்டி இருக்கிறது.
இயக்கங்களை நடத்தி, அவ் இயக்கங்களை அரசியற் கட்சியாக்கிய உங்களில் பலர்,
இன்று புலிகள் இயக்கத்தை ஆதரிக்குமாற்போல் பேசுகிறீர்கள்.
என்று நீங்கள் புலிகளின் ஆதரவாளர்கள் ஆனீர்கள் ?
நீங்கள் காட்டும் ஆதரவு, பொய் என்பது உங்களுக்கே தெரியாதா ?
உங்கள் இயக்கங்களை எல்லாம், புலிகள் அடக்கியதும் அழித்ததும் உலகறிந்த செய்திகள்.
உங்கள் அமைப்புக்களின் தலைவர்கள் எல்லாம் புலிகளால் அழிக்கப்பட்டதை,
உலகம் இன்னும் மறக்கவில்லை.
அப்படி இருக்க, எப்படி உங்களால் அவர்களின் ஆதரவாளர்களாய் நடிக்க முடிகிறது?
ஒன்று, நீங்கள் தற்போது காட்டும் புலி ஆதரவு பொய்மையாய் இருக்க வேண்டும்.
இல்லையேல் உங்கள் தலைவர்களுக்கு அன்று நீங்கள் காட்டிய விசுவாசம்,
பொய்மையாய் இருக்க வேண்டும்.
அதனாற்தான் பெரியவர் ஆனந்தசங்கரி உங்களிற் சிலரை நோக்கி,
நீங்கள் என்று புலி ஆதரவாளரானீர்கள் ? என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்.
உண்மையைச் சொல்லப் போனால் உங்களது கோபக் குமுறல்களில்,
சுமந்திரன் மீதான எதிர்ப்போ புலிகள் மீதான ஆதரவோ இருப்பதாய்த் தெரிய வில்லை,
நாடாளுமன்ற இருக்கைகளைப் பிடிக்கும் இலட்சியம்தான் வெளிப்படுகின்றது.

***

இந்த உணர்ச்சிவயப்பாட்டில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குழுவினரும்,
தம்மை வீரியமாய் இணைத்துக் கொள்கின்றனர்.
சில காலங்களிற்கு முன்னர் திரு. சிவாஜிலிங்கம் அவர்களுக்கும்,
திரு. கஜேந்திரகுமார் அவர்களுக்கும் ஏற்பட்ட சர்ச்சை ஒன்றில்,
புலிகளிடம் இருந்து தமக்குப் பாதுகாப்பு வேண்டி,
கஜேந்திரகுமார் ரெலோ இயக்கத்தை அணுகியதாகவும்,
தம்மால் அப் பாதுகாப்பு அப்போது வழங்கப்பட்டதாகவும் அறிவித்த செய்தி,
பகிரங்கமாகப் பத்திரிகையில் வெளியாகியிருந்தது.
இவ் உண்மைகள் எல்லாம், காலத்தில் கரைந்து போகும் என்று நினைக்கிறார்கள் போல!
நம் மக்களின் மறதியில்தான் இவர்களுக்கு எத்தனை நம்பிக்கை!

***

ஒன்று மட்டும் தெளிவாய்த் தெரிகிறது.
நம்மில் பெரும்பாலானோர் புலிகளுக்கும் இனத்திற்கும் மட்டுமல்ல,
தமக்கே கூட உண்மையற்றுத்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.
நம் இன உணர்ச்சியெல்லாம் பெரும்பாலும் வேம்தான்.
உண்மையானவர்கள் முற்றாக இல்லை என்று சொல்லவரவில்லை.
பொய்யர்களுடனான ஒப்பீட்டில் அவர்கள் தொகை மிகமிகக் குறைவானதாகவே இருக்கிறது.
இவ் உண்மைக்கு நம் போராட்டத்தின் தோல்வியை விட, வேறென்ன சான்று வேண்டும்?
நாம் உருப்பட வேண்டுமானால் புலிகள் பற்றிய பேச்சை துருப்புச் சீட்டாய்ப் பயன்படுத்தி
பொய்மை செய்யும் அசிங்கத்தை உடனடியாக நம்மவர்கள் நிறுத்தியாக வேண்டும்.
தலைவர்களுக்கு மட்டுமல்ல, மக்களுக்காகவும்தான் இதனைச் சொல்கின்றேன்.
அதுதான் நாம் புலிகளுக்குச் செய்யும் உண்மை மரியாதையாய் இருக்கும்.

***

நிறைவாக, கூட்டமைப்புத் தலைவர்களுக்கும் சில சொல்ல வேண்டி இருக்கிறது.
பல தடவை சொல்லிக் களைத்த விடயம்தான். ஆனாலும் திரும்பவும் சொல்கிறேன்.
பதவிப் போட்டியில் பாதாளத்திற்கும் கீழ் சென்று கொண்டிருக்கிறீர்கள்.
சுமந்திரனின் கருத்திற்கு எழுந்த எதிர்ப்பால், மாற்றணியினர் மகிழ்ந்ததைவிட
உங்களுக்குள்ளேயே பலர் மகிழ்ந்ததுதான் அதிகம்போல் தெரிகிறது.
அதனை உங்களிற் பலரின் அறிக்கைகள் தெளிவாய் வெளிக்காட்டின.
கூட்டமைப்பு என்ற சொல்லையே கொச்சைப்படுத்துகிறீர்கள்.
சுமந்திரனின் அதிகாரத்தை வெல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல்,
எங்கே குழிவரும், எப்போ நரிவிழும் என்று காத்திருக்கும்
உங்கள் இழிவை இப்பிரச்சினையிலும் காண முடிந்தது.
வெட்கக்கேடு! கட்சிக்குள்ளேயே ஒற்றுமையில்லாத நீங்களா,
இனத்திற்குள் ஒற்றுமையை ஏற்படுத்தப் போகிறீர்கள் ?
இனத்தை வைத்து விளையாடும் இந்தச் சூதாட்டத்தை உடனே நிறுத்துங்கள்.
இல்லாவிட்டால் மக்கள் உங்கள் விளையாட்டை நிறுத்த வேண்டிவரும்.

***

முடிக்குமுன், மீண்டும் ஒன்றை அழுத்தி உரைக்க வேண்டி இருக்கிறது.
சுமந்திரன்தான் தமிழர் தலைமைக்குப் பொருத்தமானவர் என்பது என் அபிப்பிராயம் இல்லை.
அவரிடமும் பல குறைபாடுகள் இருக்கவே செய்கின்றன.
எதை, எப்போது, எங்கு பேசுவது என்று அவருக்குத் தெரியவில்லை.
ஜனநாயக ரீதியாகப் பலரையும் ஒன்றிணைத்து இயங்க அவருக்குத் தெரிய வில்லை.
எடுக்கும் முடிவுகளை மக்களின் அங்கீகாரத்தோடு செயற்படுத்த அவருக்குத் தெரியவில்லை.
தான் கூட்டமைப்பின் தலைவர் இல்லை என்பதும்கூட அவருக்குத் தெரியவில்லை.
இப்படி, இன்னும் எத்தனையோ தெரியவில்லைகள்.
இவற்றையெல்லாம் தாண்டி அவர் வரும்வரை
இவர்க்கு மட்டும்தான் இனத்தலைமை தாங்கும் தகுதி உண்டு என்று,
நான் ஒருக்காலும் சொல்ல மாட்டேன். ஆனால் ஒன்று,
இன்றைய நிலையில் இனத்தை வழிநடத்துவதில் இவரது தகுதிகளோடு போட்டியிட,
தமிழினத்தலைமைகளுக்குள் வேறெவரும் இல்லை என்பதுதான் யதார்த்த நிலை.
மற்றவர்களது பலவீனம்தான் சுமந்திரனைப் பலப்படுத்தி வைத்திருக்கிறது.
இது சுமந்திரனின் பலம் அல்ல! இனத்தினது பலவீனம்!

***

பைபிளில் ஒரு கதை உண்டு.
ஒரு விபச்சாரியை கல்லால் எறிந்து கொல்லும்படி தீர்ப்பாக,
அவளைக் கல்லெறிந்து கொல்ல பலரும் போட்டியிட்டனராம்,
அப்போது அங்கு ஜேசுநாதர் வர, அந்த விபச்சாரி அவரிடம் சரண்புகுந்தனளாம்.
கல்லெறிய முற்பட்ட மக்களைக் கை காட்டி நிறுத்திய ஜேசுபிரான்,
“உங்களில் குற்றம் செய்யாதவர்கள், அவள் மேல் முதற் கல்லை எறிவீர்களாக!” என்று சொல்ல,
நேர்மையுள்ள அக்காலத்து மக்கள், உண்மை உணர்ந்து தலை குனிந்து திரும்பினராம்.
ஏனோ தெரியவில்லை இக்கதை இப்போது ஞாபகத்திற்கு வருகிறது. *

# 91 தமிழ் அரசியல் கைதிகளில் கடந்த 11 வருடங்களாக தனிமையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர் ஒருவர்தான்!

## அவரை விடுதலை செய்யக் கோரி ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா வாதம்



கொழும்பு,மே 21

"தமிழ் அரசியல் கைதிகள் 91 பேரில் 11 வருடங்களாகத் தனிமையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரேயொரு அரசியல் கைதியான கனகரத்தினம் ஆதித்தனை விடுதலை செய்யுங்கள்!

"நாட்டில் இரண்டு மாதங்களாகவே தனிமைப்படுத்தும் சட்டம் நடைமுறையில் உளள்ளது. ஆனால் நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான கைதிகளில் 11 ஆண்டுகளாக தனிமைப்படுத்தப்பட்டு மகர தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரேயொரு கைதி கனகரெட்னம் ஆதித்தன் மட்டுமே."

- இவ்வாறு நேற்று நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா.

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராகிய பஷிர் அலி மொகமட் என்பவரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டி 2006 ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி நடத்தப்பட்டக் குண்டுத் தாக்குதலில் இராணுப் பாதுகாப்புப் பிரிவை சேர்ந்த ஏழு இராணுவ அதிகாரிகளுக்கு மரணத்தை ஏற்படுத்தியமையுடன் மேலும் பத்து பொதுமக்களுக்கு கடும் காயத்தை ஏற்படுத்தினார் எனக் குற்றம் சாட்டப்பட்டு கனகரத்தினம் ஆதித்தன் மற்றும் இருவருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்றைய தினம் மேலதிக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது அரச சட்டத்தரணி இந்த வழக்கின் மேலதிக விசாரணைக்கு ஒக்டோபர. மாதத்தின் பின்னர் திகதியொன்றை நிர்ணயிக்கும்படி நீதிமன்றை வேண்டிக்கொண்ட பொழுது அரச தரப்பின் வேண்டுகோளுக்குக் கடும் ஆட்சேபனை தெரிவித்தார் எதிரி தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசா.

அவர் தனது வாதத்தில. கூறியவை வருமாறு:

91 அரசியல் கைதிகளில் 90 அரசியல் கைதிகள் நீதிமன்றக் கட்டுப்பாட்டின் கீழ் நாட்டிலுள்ள பல சிறைச் சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் எதிரியான கனகரத்தினம் ஆதித்தன் மட்டுமே பாதுகாப்பு அமைச்சரின் தடுப்புக்காவல் உத்தரவிற்கு அமைய மகர தடுப்பு முகாமில் கடந்த 11 வருடங்களாகத் தனிமையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரேயொரு அரசியல் கைதியாவார்.

இந்த வழக்கின் எதிரியான கனகரத்தினம் ஆதித்தனுக்கு எதிராக, ஒரேயொரு குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டமா அதிபரினால் யாழ்ப்பாணமேல் நீதிமன்றில் ஒரு வழக்கும் கொழும்பு மேல் நீதிமன்றில் இரு வழக்குகளுமாக மூன்று வழக்குகள் தாக்கல் செய்பட்டன. இந்த வழக்குக்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயளாளர் கோட்டபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினார் எனத் தாக்கல் செய்யட்ட வழக்கு உட்பட இரு வழக்குகளில் எதிரியாகிய கனகரத்தினம் ஆதித்த விடுதலை செய்யப்பட்டார்.

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராகிய பஷிர்அலி மொகமட் என்பவரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டித் தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரிவித்துத் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கிலும் எதிரியினால் சுயவிருப்பத்தில் வழங்கப்பட்டதாக முக்கிய சான்றாக அரச தரப்பால் முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் சுயமாகப் பெறப்பட்டதா என்பதற்கான உண்மை விளம்பல் விசாரணையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியினால் சுயமாக வழங்கப்படவில்லை, சித்திரவதை செய்தே பெறப்பட்ட வாக்குமூலம் என நீதிமன்றம் தனது கட்டளையில் தெரிவித்து நிராகரித்துள்ளது

நாட்டில் இரண்டு மாதங்களாகவே தனிமைப்படுத்தும் சட்டம் நடைமுறையிலுள்ளது. ஆனால் நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான கைதிகளில் 11 ஆண்டுகளாக தனிமைப்படுத்தப்பட்டு மகர தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரேயொரு கைதி கனகரெட்னம் ஆதித்தன் மட்டுமே.- என்றார் அவர்.

மேலும் கடந்த 10 ஆண்டுகளாக நடைபெறுகின்ற விசாரணையில் எந்தவிதமான வேறு சான்றுகளும் அரச தரப்பால் கனகரத்தினம் ஆதித்தனுக்கு எதிராக முன்வைக்கப்படவில்லை என்பதனையும் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தத அவர் கனகரெட்னம் ஆதித்தனை விடுதலை செய்யும்படி தனது வாதத்தில் வலியுறுத்தினார்.

அரச தரப்பினதும், எதிரி தரப்பினதும் வாதப் பிரதிவாதங்களையடுத்து, இவ்விடயத்தில் சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை நீதிமன்றிற்கு அறிவிக்கும்படி அரச சட்டத்தரணிக்கு உத்தரவிட்டு மேலதிக விசாரணைக்காக 2020 ஆம் ஆண்டு ஜீலை 16 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார் நீதிபதி.

## சிலாபம் கால்வாயிலிருந்து குழந்தை சடலமாக மீட்பு



சிலாபம் பொது மருத்துவ மனைக்கு அருகில் உள்ள கால்வாய் ஒன்றில் இருந்து குழந்தை ஒன்று உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழந்தையின் தாய் யார் என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

பாதசாரி ஒருவர் வழங்கிய தகவலுக்கமைய குறித்த குழந்தை நேற்று மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.






# பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரியின் இடமாற்றத்துக்கு எதிராக முறைப்பாடு!

முல்லைத்தீவு, மே 21

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலா நிதி சுகந்தனை காரணமின்றித் தேர்தல் காலத்தில் இடமாற்றம் செய்வதை நிறுத்தக்கோரி சமூக ஆர்வலர் அன்ரனி ஜெய நாதன் பீற்றர் இளஞ் செழியன் தேர்தல் ஆணையாளருக்கு முகவரியிட்டு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

எக் காரணமும் இன்றி விசாரணையும் இன்றி முல் லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலா நிதி சுகந்தனை இடமாற்றத்துக்குப் பின் னணியாக அரசியல் சூழ்ச்சி இருப்பதைச் சுட்டிக்காட்டியும், கொவிட் – 19 வைரஸ் தொற்று நோய் முல்லைத்தீவு மாவட்டம் முழு கட்டுப்பாட்டில் உள்ள நேரத்தில் திடீர் என இவ் இடமாற்றம் செய்வது முல் லைத்தீவு மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையை புரட்டிபோகுமோ எனும் கேள்வியும் எழுப்பியுள்ளது எனவும் நீதியான சுகந்திர மான பொதுத்தேர்தல் நடைபெற உடன் இவ் இடமாற் றத்தை இரத் துச் செய்ய பரிந்துரை செய்யுமாறும் அந் தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அ.ஜெ. பீற்றர் இளஞ்செழியன் –

இவ் இடமாற்றமானது வைத்திய கலா நிதி சுகந்தன் மேல் உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக அரசியல் செல் வாக்கில் நடை பெறுவதாகவே கருதுகின்றேன்.

கொவிட் 19 வைரஸ் தொற்று நோயில் இருந்து முல் லைத்தீவு மாவட்டம் முழு கட்டுபாட்டி உள்ளதை யாவரும் அறிந்த விடயம்.

இதில் பெரும் பங்காற்றிய பணிப்பாளரை காரணம் இன்றி – விசாரணையும் இன்றி திடீர் இடமாற்றம் செய்வது கேலிக்குரிய விடயமாகும்.

அதே போல் இவ் கொவிட் 19 வைரஸ் பரவும் இவ் காலத்தில் தற்போதைய பணிப்பாளருக்கு பதிலாக வரவிருப்பவர் கிழமையில் இரண்டு நாட்கள் மட்டுமே பணிபுரிவார் என அறிய முடிகின்றது. ஆகவே இவ் இட மாற்றம் இரத்து செய்யாவிடின் நீதிக் காக வீதியில் இறங்கி போராடவும் தயார் – என்றார்.

# மது அருந்த பணம் கொடுக்காத சிறுவனை தாக்கியவருக்குத் தலையில் வாள் வெட்டு!

## மோட்டார் சைக்கிளும் எரிப்பு

யாழ்ப்பாணம், மே. 21

தென்மராட்சிப் பகுதியில் மது அருந்தப் பணம் கொடுக்காத பாடசாலை மாணவனைத் தாக்கிய ஒருவரை அந்தப் பகுதி மக்கள் சேர்ந்து தாக்கிய தில் அவர் படுகாயமடைந்துள்ளார். அவரது மோட்டார் சைக்கிள் தீ வைக்கப்பட்டுள்ளது.

நேற்று இரவு இந்தச் சம்பவம் நடந்தது.

மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு அருகில் இந்த சம்பவம் நடந்தது.

கொரோனா தொற்றின் பின்னர் அந்தப் பகுதி யில் புதிதாக அமைக்கப்பட்ட மரக்கறி விற்பனை நிலையம் ஒன்றின் அருகில், அந்த விற்பனை நிலைய உரிமையாளரும், இன்னொருவரும் மது அருந்தியுள்ளனர்.

16 வயதான பாடசாலை மாணவனொருவர் அந்த வர்த்தக நிலையத்தில் பணிபுரிந்துள்ளார்.

அந்தச் சிறுவனிடம் மது அருந்தப் பணம் தருமாறு ஒருவர் கேட்டுள்ளார். நேற்றுமுன்தின மும் சிறுவனின் பணத்தை அவர் எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று சிறுவன் பணம் கொடுக்க மறுத்தபோது, கத்தியால் சிறுவனைத் தாக்க அவர் முயன்றுள்ளார். சிறுவன் தடுக்க முயன்றபோது கையில் காயமடைந்தார்.

சிறுவன் காயமடைந்ததை அறிந்த அந்தப் பகுதியை சேர்ந்தவர்கள் ஒன்று திரண்டு, பணம் கேட்டு மிரட்டியவரை நையப்புடைத்துள்ளனர். இதன்போது அவரது தலையில் பெரும் வாள் வெட்டுக் காயமும் ஏற்பட்டது.

நடு வீதியில் அவரது மோட்டார் சைக்கிளும் எரிக்கப்பட்டது.

அதிக இரத்தப் பெருக்குடன் அந்த நபர் சாவ கச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மட்டுவில் வடக்கை சேர்ந்த மகேந்திரன் முரளி தரன் (வயது – 36) என்பவரே படுகாயமடைந்தார். சிறுவனும் தற்போது சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# பொலிஸாருக்கு ‘கடி’

கொழும்பு, மே 21

பொலிஸாரால் விரட்டிப் பிடிக் கப்பட்ட போதை பொருள் வியா பாரி, வாய்க்குள் மறைத்து வைத் திருந்த போதைப்பொருளை மீட்க முயன்ற பொலிஸ் உத்தி யோகத்தரின் கை விரல்களைக் கடித்துள்ளார்.

இந்தச் சம்பவம் வல்வெட்டித் துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியொன்றில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியொன்றில், போதைப் பொருள் வியாபாரம் நடைபெறுவதாக, நேற்று முன் தினம் இரவு கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து பொலி ஸார் அவ்விடத்துக்கு விரைந் தனர்.

அவ்வேளை அங்கிருந்த இளைஞன் ஒருவர் பொலிஸா ரைக் கண்டதும் அங்கிருந்து ஓட் டம் பிடிக்கவே, பொலிஸார் அவ ரைத் துரத்திப் பிடித்தனர்.

இதன்போது, அவ்விளை ஞன்தனதுஉடைமையில்இருந்த போதைப்பொருள்பைக்கெற்றை விழுங்குவதற்காக வாய்க்குள் போட்டபோது, விரைந்து செயற் பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர், இளைஞனின் வாய்க் குள்கைவிட்டுபோதைப்பொருளை மீட்க முயற்சித்துள்ளார்.

இதன்போதுஅவ்விளைஞர் பொலிஸ் உத்தியோகஸ்தரின் கை விரல்களைக் கடித்துள்ளார். இருந்த போதிலும் பொலிஸார் விடாது, அவரது வாய்க்குள் இருந்து போதைப்பொருளை மீட்டனர்.

இதையடுத்த, அவ்விளை ஞனைப் பொலிஸார் கைது செய்தனர்.



# தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்





படம் 1



படம் 2

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'புகையிரம்'

**நேற்றைய தினம் அதி களவான மாணவர்கள் 'நீதிமன்றம்' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியா ததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.**

**படம் 1**
**து.ஷாருக்சன் - தரம் 2**
**தி/ உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி**

**படம் 2**
**கே. நிருஜிகா - தரம் 4**
**விவேகானந்தா கல்லூரி**

த. கபிலாஷ் – தரம் 8
தி/கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

லனுஜன் நவரட்ணம் – தரம் 3
North Bridlewood Junior Public School, Scarboough, Canada

பா. தனுபன் – தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இ. கார்த்திகன் – தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

டி. ஹரிஸ்மன் – தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

வி. சலோமி – தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

உ. ஆராதனா – தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

சி. சிவகலை – தரம் 4
யா/இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

உ. ரோஷித் – தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

கசிந்திரா கிரிஸ்பின் – தரம் 5
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஆர். அஜிஷன் – தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

சுமன்ராஜ் சஸ்வந் – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஞா. ரிசாந் – தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அருள்நாத் அக்சயன் – தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

விஜயநிதி கருன் – தரம் 7
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

என். கொட்வின் – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி


காலைக்கதிர் Kalaikathir

புகையிரதம்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு
சித்திரப்போட்டி

**இன்று (21/05/2020) தலைப்பு**
**புகையிரதம்**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோ ரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# பேராசிரியர் கூலை தனிமைப்படுத்த மும்முரமாக நிற்கும் யாழ். பொலிஸ்!

யாழ்ப்பாணம், மே 21

எனது மகள் தனிமைப்படுதல் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளதாகச் சுகாதாரப் பணிப்பாளரும், இராணுவத் தளபதியும் சான்றிதழ் வழங்கியுள்ள நிலையில் இப்போது பொய்யான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. நானும் 21 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு பொலிஸாரால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் தெரிவித்தார்.



பேராசிரியர் ரட்ணஜீவன் கூலின் புதல்வி வெளிநாட்டில் இருந்து இலங்கைக்குத் திரும்பியுள்ள நிலையில், அரச வாகனத்தைப் பயன்படுத்தி அவரை அழைத்து சென்றார், தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார் எனக் கிளம்பியுள்ள குற்றச்சாட்டுக்களையடுத்து, தனது தரப்பு கருத்துக்களை கூல் வெளியிட்டுள்ளார்.

அவர் தெரிவிக்கையில் –

எனது மகள் வெளிநாட்டில் இருந்து வந்தவுடன் நீர்கொழும்பு ஹோட்டல் ஒன்றில் இரண்டு வாரங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

அதற்காக நான் ஒன்றேமுக்கால் இலட்சம் ரூபாய்கள் செலுத்தியுள்ளேன். இரண்டு வாரங்கள் தனிமைப்படுத்தல் காலம் முடிந்தவுடன் மருத்துவப் பரிசோதனைகளில் எனது மகள் முழுமையாக ஆரோக்கியமான உடல் நிலையில் உள்ளார் எனவும் அவர் வீடு செல்ல முழுமையான உடல் தகுதியை பெற்றுள்ளார் எனவும் சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க மற்றும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா ஆகியோர் உறுதிப்படுத்திய மருத்துவச் சான்றிதழை வழங்கியுள்ளனர்.

அதுமட்டுமல்ல மகளின் தனிமைப்படுத்தல் நாள்கள் முடிந்த நேரம் நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்த காரணத்தினால் என்னால் பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. எனது தனிப்பட்ட வாகனத்தில் செல்லவும் அனுமதி இல்லை. எனவே நான் எவ்வாறு இந்தப் பிரச்சினையைக் கையாள்வது என எம்மை நியமித்த அரசமைப்புப் பேரவையிடம் அனுமதி கோரினேன்.

எனது போக்குவரத்துக்கு மாதாந்தம் நிதியும் வாகன ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் நான் பயன்படுத்தும் வாகனத்தை எடுத்துக் கொண்டு நீர்கொழும்பு செல்லுமாறு அரசமைப்புப் பேரவை எனக்கு அனுமதி வழங்கியது. அவர்களின் அனுமதியைப் பெற்று நெருக்கடியான சூழலில் எனக்கு மாற்றுவழிமுறையொன்று இல்லாத காரணத்தினால் இவ்வாறு செயற்பட்டேன்.

எனினும் நான் நீர்கொழும்பில் இருந்து வீடு திரும்பும் வரையில் ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் எனது வாகனம் நிறுத்தப்பட்டுச் சோதிக்கப்பட்டது. நான் விடயத்தைத் தெரிவித்தபோது எனது வாகன இலக்கத்தைச் சகல சோதனைச் சாவடிகளுக்கும் கொடுத்துள்ளதாகவும் வாகனம் வரும்போது நிறுத்தி விசாரணை செய்ய வேண்டும் எனவும் மேலிடத்தில் இருந்து உத்தரவு வந்துள்ளது. ஆனால் என்ன காரணம் என ஒன்றும் தெரியவில்லை எனச் சோதனைச் சாவடியில் இருந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

நான் வீட்டுக்கு வந்தவுடன் பிரதான பொலிஸ் பரிசோதகர் வீட்டுக்கு வந்து எனது மகளிடமும் என்னிடமும் விசாரணை நடத்தினார்.

நாங்கள்தனிமைப்படுத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பாக நான் 21 நாள்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

எனது உடல்நிலை குறித்து சுகாதார அதிகாரியே அவ்வாறு ஏதேனும் காரணிகள் இருப் பின் கூற வேண்டும். மாறாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

என்னிடம் உள்ள ஆதாரங்கள் அனைத்தையும் நான் முன் வைத்தேன். பின்னர் எனது வாகனச் சாரதி நேற்று முன்தினம் மூன்று மணிநேரம் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டுள்ளார். நான் எங்கு சென்றேன், யாரை சந்தித்தேன் என்ற கேள்விகளை அவரிடம் கேட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றுத் தேர்தல்கள் ஆணைக்குழு கூட்டத்திற்கு நான் செல்லவில்லை. ஆனால் வீடியோ காணொளி மூலமாக நான் இந்த விடயங்களை தெரிவித்தேன்.

அப்போது எனது தரப்பு விடயங்களை முன்வைத்து ஆணைக்குழு அறிக்கை ஒன்றினை வெளியிடவுள்ள தாகத் தெரிவித்தனர்.

ஆகவே என்னை இலக்கு வைத்து தனிப்பட்ட ரீதியில் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எனது வாயை மூட வைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டுள்ளது – என்றார்.

சுயாதீனமாக தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் செயற்படவேண்டுமென்றபோதும், கூல் அரசியல் கட்சிகள் சார்ந்து செயற்படுகிறார் என்ற விமர்சனங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஏறாவூரில் இளைஞர் கொலை

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவின் செங்கலடிப் பிரதேசத்தில்கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் செவ்வாய்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த 25 வயதுடைய இளைஞன் மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தனிப்பட்ட தகராறே கொலைக்கான காரணம் என கூறப்படுகிறது. சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார். ஏறாவூர் பொலிசார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர்.

## செம்பியன்பற்று, மாமுனையில் பொதுமக்களின் மீது தாக்குதல்

விவசாய நடவடிக்கைகளுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தவர்கள் மீது சரமாரியான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். வடமராட்சிக் கிழக்கு செம்பியன்பற்று, மாமுனையைச் சேர்ந்த எண்மருக்கே இவ்வாறு வயரினால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7 மணி தொடக்கம் 7.30 மணிக்கு இடையில் இந்தச் சம்பவம் பருத்தித்துறை மருதங்கேணி பிரதான வீதியில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

வாகனம் ஒன்றில் நின்றுகொண்டிருந்த கடற்படையை ஒத்த சீருடை தரித்த மற்றும் சிவில் உடையில் நின்றவர்களாலேயே இத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. தாக்குதலுக்கு உள்ளானவர்களது உடல்களில் பலத்த கண்டல்கள் காணப்படுகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் அச்சம் காரணமாக மருத்துவமனைக்கு செல்லாமலும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்க மறுத்தும் வருகின்றனராம்.

தாக்குதலுக்கு உள்ளானவர்கள் உழவு இயந்திரம், மோட்டார்சைக்கிள், சைக்கிள் போன்ற வாககனங்களில் தனித்தனியாக பயணித்தவர்கள் என்றும் எதற்காக தாக்குதல் நடத்தப்பட்டது என்று தமக்கு காரணம் தெரியவில்லை என்றும் அச்சம் காரணமாக பெயர் குறிப்பிட விரும்பாத பாதிக்கப்பட்ட ஒருவர் தெரிவித்தார்

இதேவேளைஊரடங்குச்சட்டம்இரவு8மணிக்கே நடைமுறைப்படுத்தப்படுகின்ற சூழலில் 7.30 மணிக்கே இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சர்வதேசத்துக்கு அடிபணிய இலங்கை அரசு தயாரில்லை

## கோட்டாவின் உரையை விமர்சிக்க நாட்டைக் காட்டிக்கொடுத்த எதிரணியினருக்குத் தகுதி இல்லை என்கின்றது மஹிந்தர் அணி

**கொழும்பு, மே 21**

**இலங்கையின் இறையாண்மையில் தலையிட வெளியாள்களுக்கு அருகதையில்லை. எமது போர் வீரர்களைக் கொச்சைப்படுத்தவும் அவர்களுக்குத் தகுதியில்லை. அதேவேளை, சர்வதேசத்துக்கு அடிபணிந்து போகவும் நாம் தயாரில்லை. இதைத்தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜக்ஷ போர் வெற்றி விழாவில் தெட்டத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.**

**– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.**

ஜனாதிபதியின் உரையை விமர்சிக்க நல்லாட்சி என்ற பெயரில் நாட்டை சர்வதேசத்துக்குக் காட்டிக் கொடுத்த எதிரணியினருக்குத் தகுதி இல்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போர் வெற்றி விழாவில் படையினருக்கும் நாட்டுக்கும் எதிராக சர்வதேச நிறுவனங்கள் அல்லது சர்வதேச அமைப்புகள் அழுத்தங்களைத் தொடர்ந்து பிரயோகித்தால் அவற்றின் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்கிக்கொள்ளத் தான் ஒருபோதும் பின்நிற்கப் போவதில்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றியிருந்தார். அவரின் உரைக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் பதிலளித்துள்ளனர்.

**மஹிந்த ராஜபக்ஷ**

இலங்கையின் இறையாண்மையில் தலையிட வெளியாள்களுக்கு அருகதையில்லை. எமது போர் வீரர்களைக் கொச்சைப்படுத்தவும் அவர்களுக்குத் தகுதியில்லை. சர்வதேசம் எம்மீது தொடர் அழுத்தங்களைப் பிரயோகித்தால் சர்வதேச அமைப்புகளின் உறுப்புரிமையிலிருந்து நாம் வெளியேறுவதில் தப்பேதும் இல்லை. இதைத்தான் ஜனாதிபதி வெளிப்படையாகக் கூறியுள்ளார். எனவே, இதற்கு எதிராக எதிரணியினர் கருத்துக்களை வெளியிடும்போது அவதனாமாக இருக்க வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் சர்வதேசத்திடம் நாட்டை அடகுவைக்க நாம் தயாரில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

**ஜி.எல்.பீரிஸ்**

எமது படைவீரர்களின் தியாகத்தை வீணாக்கி – அசிங்கப்படுத்தி சர்வதேசத்துக்கு அடிபணிந்துபோக நாம் தயாரில்லை. எமது நாட்டின் சுயாதீனத்தை சர்வதேசத்திடம் அடமானம் வைக்க நாங்கள் ஒருபோதும் தயாரில்லை. இதைத்தான் ஜனாதிபதி போர் வெற்றி விழாவில் தெட்டத்தெளிவாக எடுத்துரைத்துள்ளார். எனவே, ஜனாதிபதியின் உரையை விமர்சிக்க நல்லாட்சி என்ற பெயரில் நாட்டை சர்வதேசத்துக்குக் காட்டிக் கொடுத்த எதிரணியினருக்குத் தகுதி இல்லை என்று சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

**விமல் வீரவன்ஸ**

எம்மை மீறி எம் மீது சர்வதேச கை வைக்க முடியாது என்பதை ஜனாதிபதி பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். படையினரின் தியாகங்களை அவமதிக்க விடமாட்டார் என்பதையும், படையினர் மீது சர்வதேசம் வாய்க்கு வந்த மாதிரி குற்றச்சாட்டுக்களைச் சுமத்த முடியாது என்பதையும் ஜனாதிபதி அழுத்தம் திருத் தமாகத் தெரிவித்துள்ளார். எனவே, இனி மேலும் சர்வதேசம் எம்மையும் படைவீரர்களையும் எமது தாய்நாட்டையும் மிரட்ட முடியாது. அப்படி மிரட்டினால் சர்வதேச அமைப்புகளின் உறுப்புரிமையிலிருந்து நாட்டை விலக்கிக்கொள்வார் ஜனாதிபதி. இந்த நிலையில், ஜனாதிபதியின் உரையால் நாட்டுக்குத்தான் ஆபத்து என்று ரணில், சஜித், சம்பந்தன் அணிகள் விமர்சனக் கருத்துக்களை வெளியிடுவது சிறுபிள்ளைத்தனமானது என்று அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

# சர்வதேச அமைப்புகளில் இருந்து இலங்கையை விலக்கவேண்டாம்

## லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை



கொழும்பு, மே 21

சர்வதேச அமைப்புகளிலிருந்து விலகுவதென்பது நாட்டை பின்நோக்கியே அழைத்துச்செல்லும். அத்தகைய அமைப்புகளுடன் பேச்சு நடத்தித் தனது தரப்பு நியாயத்தை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இராணுவத்தையும், நாட்டையும் தொடர்ச்சியாக இலக்கு வைக்கும் சர்வதேச அமைப்புகள் அல்லது நிறுவனங்களிலிருந்து வெளியேறுவதற்குத் தயங்கப்போவதில்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்துள்ள அறிவிப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சர்வதேச அமைப்பு, நிறுவனங்களின் கொள்கை கோட்பாடுகளை ஏற்று, அதன் சட்டத்திட்டங்களுக்கமையவே இலங்கை உறுப்புரிமை பெற்றிருக்கின்றது. மாறாக அத்தகைய அமைப்புகளில் வெறுமனே இணையமுடியாது. எனவே, சட்டதிட்டங்களை நிச்சயம் பிற்பற்றவேண்டும். ஐக்கிய நாடுகள் சபையில்கூட இலங்கை அங்கம் வகிக்கின்றது. இந்த நிலையில் அழுத்தங்கள் தொடர்ந்தால் சர்வதேச அமைப்புகளில் இருந்து விலகக்கூடப் பின்நிற்கப்போவதில்லை என்று அறிவிப்பு விடுப்பது ஏற்புடைய நடவடிக்கை அல்ல.

அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சர்வதேச அமைப்பொன்று குற்றச்சாட்டு முன்வைக்கும்பட்சத்தில் உரிய விளக்கத்தை வழங்கி தமது தரப்பு நியாயத்தை எடுத்துரைக்கவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது நாம் இதனைச் செய்தோம்.

சர்வதேச ஒத்துழைப்பின்றி எம்மால் செயற்படமுடியாது. அவ்வாறு செயற்பட்டால் நாடு தனிமைப்படுத்தப்படும் அபாயம் உருவாகும். அதன்மூலம் நாடு பின்நோக்கியே பயணிக்க வேண்டிவரும் – என்றார்.

# சுகாதார விதிமுறை மீறல்; தனியார் வகுப்புக்கு 'சீல்'

கொழும்பு, மே 21

கொவிட் 19 விதிமுறைக்கமைய சுகாதார முறைமையைக் கடைப்பிடிக்காமல் மேலதிக வகுப்புகளை இரசியமாக நடத்திய ஆசிரியர்கள் மற்றும் 14 மாணவர்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்

கொவிட் 19 தொற்று காரணமாக நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் அரசால் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் தலவாக்கலை பகுதியில் இரகசியமாக மேலதிக வகுப்புகளை நடத்தி வந்த இரண்டு ஆசிரியர்கள் மற்றும் கல்வி பயின்ற மாணவர்கள் 14 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வகுப்பறையும் பொது சுகாதாரப் பரிசோகர்களினால் நேற்று சீல் வைக்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை லிந்துலை நகரசபையின் தலைவர் அசோக்க சேபால தெரிவித்தார்.

# முஸ்லிம் காங்கிரஸும் மனு

கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பது அடிப்படை மனித உரிமை மீறல் எனத் தெரிவித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் உயர் நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் மனுவொன்றை நேற்றுக் காலை தாக்கல் செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வழிகாட்டலில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.சி. முகம்மட் நவாஸ் நெறிப்படுத்தலில் சட்டத்தரணி முகம்மது ஹனிபா முகம்மட் ஹைர் குறித்த மனுவை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில் கடந்த ஏப்ரல் 04 ஆம் திகதி சனிக்கிழமை திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட 2170/08 எனும் வர்த்தமானி சட்டத்திற்கு முரணானது. அதை ரத்துசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றும் கொரோனாவில் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை உரிய முறைப்படி நல்லடக்கம் செய்ய வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

மேலும்தான் ஒரு முஸ்லிம் சமூகத்தை சேர்ந்தவன் என்றவகையிலும், மக்களின் பிரதிநிதி என்ற அடிப்படையிலும் தனது மத சுதந்திர உரிமை மீறப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கொரோனாவில் மரணிக்கும் முஸ்லிம் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று, நீதிமன்று உத்தரவிடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னிஆரச்சி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜயசிங்க, சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்டோரை பிரதிவாதிகளாக பெயரிட்டே, இந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.05.2020 இல் வெளியிடப்பெற்றது.